பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 142

வியாழக்கிழமை
17 ஏப்ரல் 2025

சித்திரை 04 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## வடக்கு மக்கள் எமது பக்கமே!

விஜித ஹேரத் நம்பிக்கை

விரிவு பக்:- 06

விடுவிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட

# மாங்கொல்லைக் காணிகளும் இராணுவத்தின் பிடியிலேயே!

- வேலிவரை சென்றும் உட்செல்லமுடியாத நிலை
- இரண்டு வருடங்களாகத் தொடரும் ஆக்கிரமிப்பு
- 47 குடும்பங்கள் தொடர்ச்சியாக அந்தரிப்பு

**யாழ்ப்பாணம், ஏப்ரல் 17**

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலைக்கு அருகாகவுள்ள, 'மாங்கொல்லை' காணிகளை, 2023ஆம் ஆண்டு மத்திய பகுதியில் விடுவிப்பதாக அறிவித்துள்ள போதிலும், அந்தக் காணிகள் இன்னமும் பொதுமக்களிடம் ஒப்படைக்கப்படாமல் இராணுவத்தின் பிடியில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

15

## யாழ்ப்பாணம் வருகிறார் அநுர



யாழ்ப்பாணம், ஏப். 17

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தேர்தல் பரப்புரைகளுக்காக இன்று யாழ்ப்பாணத்துக்கு வருகைதரவுள்ளார்.

15

## கிளிநொச்சி மருத்துவமனையில் மருத்துவ நிபுணர்கள் இல்லை!

நோயாளர்கள் அவதி

விரிவு பக்:- 03

பிள்ளையானின்

## சட்டத்தரணியாக கம்மன்பில இது ஓர் அரசியற் சூழ்ச்சியே!

அமைச்சர் நளிந்த தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 17

பிள்ளையானின் சட்டத்தரணியாக முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில செயற்படுவதுகூட ஒருவகையான அரசியல் சூழ்ச்சியாகும். எனினும், எமது ஆட்சியின் கீழ் கடந்தகால சம்பவங்களின் முடிச்சுகள் அவிழ்க்கப்படும் என்று அமைச்சரவைப்

15

## பிள்ளையான் ஒரு தேசிய நாயகனே!

அவரே புலிகளை வென்றார் கம்மன்பில கண்டுபிடிப்பு



கொழும்பு, ஏப். 17

கருணாவும், பிள்ளையானும் புலிகள் அமைப்பில் இருந்து வெளியேறி, புலிகளுக்குஎதிராகபோராடத்தீர்மானித்தமையே புலிகள் அமைப்பின் முடிவுக்குரிய ஆரம்பமாகும். அந்தவகையில் தேசிய நாயகனாகக் கருதப்படவேண்டியவரே பிள்ளையான் என்று முன்னாள் அமைச்சரும் சட்டத்

15

## மேன்முறையீட்டு நீதிமன்றில் வடக்குத் தரப்புகள் வழக்கு!

கொழும்பு, ஏப். 17

உள்ளூராட்சித் தேர்தலில் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமை தொடர்பில், மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேலும் சில தரப்புகளால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

15

## அமெரிக்காவின் வரிகளை கையாளத் திட்டம் என்ன?

முன்னாள் ஜனாதிபதி ரணில் கேள்வி



கொழும்பு, ஏப். 17

அமெரிக்காவின் வரி விதிப்பால் இலங்கைக்குப் பெரும் தாக்கங்கள் ஏற்படக்கூடும். எனவே, இதனை அவசர நிலைமையாகக் கருதி, தம்மால் முன்னெடுக்கப்படவுள்ள நடவடிக்கைகளை அரசாங்கம் தெளிவுபடுத்தவேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் ரணில் விடுத்துள்ள சிறப்பு அறிக்கையில் உள்ளதாவது:-

15

## கஞ்சா மீட்பு; ஒருவர் கைது

கிளிநொச்சி, ஏப். 17

கிளிநொச்சி - புளியம்பொக்கணைப் பகுதியில் 75 கிலோவுக்கு மேற்பட்ட கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. அவற்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இராணுவத்தினருக்குக்

15

## இரு இளைஞர்களை கடத்தித் தாக்குதல்

மானிப்பாயில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஏப். 17

இரண்டு இளைஞர்களை ஓட்டோ ஒன்றில் கடத்தித் தாக்குதலை மேற்கொண்ட இளைஞர் குழுவொன்று, அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாக

16

### முச்சந்தி முரளி



'இப்பிடி.இன்னும் எத்தினை காணியளை விட்டதெண்டு சொல்லிப்போட்டு விடாமல் வைச்சிருக்கினமோ தெரியேலையே'

அரசைக் கட்டுப்படுத்துவதற்காக

## உள்ளூராட்சி சபைகளில் கூட்டணி அமைக்க முடிவு

எதிரணிகள் கொள்கையளவில் இணக்கம்

கொழும்பு, ஏப். 17

தேசிய மக்கள் சக்திக்கான ஆதரவலையை கட்டுப்படுத்துவதற்குரிய அரசியற்போரை முன்னெடுத்துவரும் எதிர்க்கட்சிகள், உள்ளூராட்சி சபைகளில் கூட்டணி அமைப்பது தொடர்பில் அவதானம் செலுத்தி

15

வவுனியா – பாவற்குளத்தில் பரபரப்பு

## குருதிக் கறைகளுடன் குளத்தில் சடலம் மீட்பு

வவுனியா, ஏப். 17

வவுனியா பாவற்குளம் அலைகரைப்பகுதியில், குருதிக் கறைகளுடன் குளத்திலிருந்து சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனியும் கோட்டைவிட்டால் தமிழரைக் காப்பாற்றமுடியாது

## செல்வம் அடைக்கலநாதன் தெரிவிப்பு

மன்னார், ஏப்.17

உள்ளூராட்சி மன்றங்களையும் ஜே.வி.பி.அரசாங்கம் முழுமையாகக் கைப்பற்றுமாக இருந்தால் தமிழ் மக்களைக் காப்பாற்றமுடியாத ஒரு சூழல் ஏற்படும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார். மன்னாரிலுள்ள அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உள்ளூராட்சி மன்றங்கள் காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வுக்கான அனுமதியை வழங்கக்கூடிய அதிகாரம் கொண்டவை. எனவே உள்ளூராட்சி மன்றங்களை ஜே.வி.பி. அரசு முழுமையாகக் கைப்பற்றுமாக இருந்தால் மன்னார் மாவட்டத்தைக் காப்பாற்றமுடியாத சூழலை ஏற்படுத்தும்.

மன்னாரில் நகரசபை மற்றும் பிரதேசசபைகளை கைப்பற்றுவதன் ஊடாக தமது காரியங்களை நிறைவேற்றிக்கொள்ளமுடியும் என்ற நோக்கத்துடனேயே அவர்கள் செயற்படுகின்றனர்.

ஜனாதிபதி,பிரதமர் மற்றும் அமைச்சர்கள் தேர்தல் காலங்களில் மாத்திரமே வன்னிப் பிரதேசங்களுக்கு வருகின்றனர். குறிப்பாக மன்னார் மாவட்டத்துக்கு வருகின்றனர்.தேர்தலில் தமது கட்சி வெற்றியைப் பெற்றுக்கொள்ளப் வேண்டும் என்ற நோக்கிலேயே அவர்கள் படையெடுக்கின்றனர்.

வடக்கு-கிழக்கில் உள்ள அனைத்து உள்ளூராட்சிசபைகளிலும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடுகின்றது.

குறிப்பாக தேசியத்தை நேசிக்கும் தமிழ்க் கட்சிகளுடன் நாங்கள் கூட்டுச் சேர்ந்து ஆட்சி அமைக்கும் சூழலை உருவாக்குவோம். இனி வருகின்ற காலங்களில் நாங்கள் ஒற்றுமையாக இல்லாதுவிட்டால் எமது பிரதேசங்களில் பிளவுகளும் அழிவுகளும் ஏற்படும் - என்றார். (ச-56)

# திடீர் விபத்துகள்
## 2 நாள்களில் 412 பேர் மருத்துவமனையில்!

கொழும்பு,ஏப்.17

கடந்த ஏப்ரல் 13 மற்றும் 14 ஆகிய திகதிகளில் பதிவான பல்வேறு விபத்துகளில் காயமடைந்து மொத்தம் 412 பேர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என தேசிய சுகாதார ஆணைக்குழுவின் விபத்துப் பிரிவு பணிப்பாளர் இந்திக ஜாகொட தெரிவித்துள்ளார்.

அவர்களில் 6 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதே இறந்துவிட்டனர்.

அதேவேளை இந்த ஆண்டு பட்டாசு தொடர்பான காயங்கள் குறைந்துள்ளன. பட்டாசுக் காயங்கள் காரணமாக இரண்டு நபர்கள் மட்டுமே மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

# ரணிலைக் கைதுசெய்து விசாரிப்பதே சரியானது!

*முன்னணி சோசலிசக் கட்சி வலியுறுத்து*

கொழும்பு, ஏப்.17

பட்டலந்த அறிக்கையின் பரிந்துரைகளை அரசாங்கம் உண்மையாகச் செயற்படுத்துவதாக இருந்தால், கொலைக்குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டுள்ள ரணில் விக்கிரமசிங்கவை உடனடியாகக் கைது செய்து விசாரணை நடத்தவேண்டும் என்று முன்னணி சோசலிசக் கட்சியின் கல்விப் பொதுச் செயலாளர் புபுது ஜாகொட தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது பட்டலந்த ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் ஒன்றுதான் சித்திரவதை முகாமை முன்னெடுத்துச் சென்றதாகச் சாட்சிகளுடன் உறுதிப்படுத்தப்பட்டுள்ள ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட நபர்களின் குடியுரிமையை இரத்துச் செய்வதாகும். அது தொடர்பான சட்டங்களை அமைத்துக் கொள்ள அரசாங்கத்துக்கு மூன்றில் இரண்டு அதிகாரம் இருக்கிறது. அதனால் மீண்டும் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறுவதில் எந்தப் பிரயோசனமும் இல்லை.

குற்றஞ்சாட்டப்பட்டிருப்பவர்களுக்குத் தண்டனை பெற்றுக்கொடுக்கவேண்டும் என்ற எண்ணம் அரசாங் கத்துக்கு இருக்குமானால் கொலைக்குற்றச்சாட்டு சுமத்தப்படும் ரணில் விக்ரமசிங்க உள்ளிட்ட நபர்களைக் கைதுசெய்து விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் - என்றார். (எ-இ)



# கம்மன்பிலவிடம் கண்ணீர்விட்டு கதறியழுத பிள்ளையான்

கொழும்பு, ஏப்.17

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசாரணைகளின்போது யார் மீதும் பழிசுமத்தவோ, காட்டிக்கொடுப்புகளைச் செய்யவோ இல்லை என்று சட்டத்தரணி உதய கம்மன்பிலவிடம் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான பிள்ளையான் தெரிவித்துள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சட்டத்தரணி உதய கம்மன்பில பிள்ளையானைச் சந்தித்தபோது, அரசாங்கத்தின் பழிவாங்கல்கள் தொடர்பாக பிள்ளையான் ஆழ்ந்த கவலையை கண்ணீருடன் வெளியிட்டு, இலங்கை ஆட்சியாளர்கள் தன்னை நன்றாகப் பயன்படுத்திவிட்டு தற்போது கைவிட்டுவிட்டார்கள் என்று ஆதங்கப்பட்டுள்ளார் என்றும் கூறப்படுகின்றது.


அரச சாட்சியாளராக மாறி ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கவேண்டும் என்று அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றது என்றும், கடத்தல் விவகாரம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டபோதிலும், ஈஸ்டர் ஞாயிறு தின தாக்குதல் சம்பவத்தை தன்னுடன் தொடர்புபடுத்தும் வகையில் விசாரணையாளர்கள் செயற்படுகின்றனர் என்றும் பிள்ளையான் உதய கம்மன்பிலவிடம் தெரிவித்துள்ளார்.

விசாரணை அறையில் உறங்குவதற்குக்கூட வசதிகள் இல்லை என்றும், தரையில் படுத்துறங்கவேண்டியுள்ளது என்றும் அவர் சட்டத்தரணி உதய கம்மன்பிலவிடம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அங்கிருந்த பொலிஸாரை சட்டத்தரணி உதய கம்மன்பில கடிந்து கொண்டார் என்றும் கூறப்படுகின்றது. (எ-இ)

# 2 நாள்களில் போதை சாரத்தியம்; 800 பேர் கைது!

கொழும்பு,ஏப்.17

கடந்த 2 நாள்களில் மதுபோதையில் வாகனம் செலுத்திய 800 சாரதிகள் மீது வழக்குப் பதிவுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். 13 மற்றும் 14 ஆம் திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட வீதிச் சோதனை நடவடிக்கைகளின்போதே அவர்கள் சிக்கினர் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார். (ச-இ)



# தொல்லியல் பாதுகாப்புக்கு ஒதுக்கப்பட்ட நிதி விரயம்!

கொழும்பு, ஏப்.17

தொல்லியல் சின்னங்களைப் பாதுகாப்பதற்கென ஒதுக்கிய நிதியின் பெரும்பகுதி அலுவலக உபகரணக் கொள்வனவுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளமை தேசிய கணக்காய்வு அறிக்கையில் தெரியவந்துள்ளது.

2023 ஆம் ஆண்டில் தொல்பொருள் சின்னங்களின் பராமரிப்புக்காகவும், அவற்றைப் பாதுகாப்பதற்காகவும் 62 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது.

இந்த நிதியில் இருந்து சுமார் 39 இலட்சம் ரூபா தொல்லியல் திணைக்களத்துக்கென கணினிகள், காகிதாதிகள், மேசைகள் போன்ற அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காகச் செலவிடப்பட்டுள்ளது. எஞ்சிய தொகையான 23 இலட்சம் ரூபாவே தொல்லியல் சின்னப்பராமரிப்புக்குச் செலவிடப்பட்டுள்ளது. இவ்வாறு குறித்த நிதியை ஒதுக்கப்பட்ட தேவைக்கு மாறாக அலு வலக உபரணக் கொள்வனவுக்கென செலவிட்டமை தொடர்பில் தேசிய கணக்காய்வுத் திணைக்களம் கேள்வி எழுப்பியுள்ளது. (ச-இ)

# பெற்றோலிய வருவாய் 12.8 பில்லியன் டொலர்

கொழும்பு,ஏப்.17

நாட்டின் பெற்றோலியப் பொருள்கள் ஏற்றுமதி வருவாய் வரலாற்றில் முதன்முறையாக ஒரு பில்லியன் அமெரிக்க டொலரைத்தாண்டியுள்ளது.

அதன்படி கடந்த ஆண்டு நாட்டின் ஏற்றுமதி வருவாய் 12.8 பில்லியன் டொலராகப் பதிவாகியுள்ளது. இது 2023 உடன் ஒப்பிடும்போது 7.02 வீத வளர்ச்சி என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கப்பல்கள் மற்றும் விமானங்களுக்கான எரிபொருள் விநியோக அளவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பே இதற்குப் பிரதான காரணம்.

செங்கடலில் கப்பற் போக்குவரத்துக்கு ஏற்பட்ட இடையூறுகள் பெற்றோலியப் பொருள்களின் ஏற்றுமதி வருவாய் அதிகரிப்புக்கு வழிவகுத்தன என்று மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மருத்துவமனையில் மருத்துவ நிபுணர்கள் இல்லை!

## நோயாளர்கள் அவதி

**கிளிநொச்சி, ஏப்.17**

**கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் கடந்த ஒரு மாத காலத்துக்கு மேலாக என்புமுறிவு மற்றும் கண் சிகிச்சைப் பிரிவுகளுக்கு மருத்துவ நிபுணர்கள் இல்லாது காணப் படுவதால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.**

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம், மல்லாவி, விசுவமடு, உடையார்கட்டு ஆகிய பிரதேச மக்களுக்கும் கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கும் சிசிச்சை வழங்கும் பிரதான மருத்துவமனையாக கிளிநொச்சி பொது மருத்துவமனை காணப்படுகின்றது.

இங்கு மயக்க மருத்துவ நிபுணர் ஒருவர் மாத்திரமே கடமையாற்றிவருகின்றார். மருத்துவமனையில் விபத்துகளில் காயமடையும் அதிகளவானவர்கள் சேர்க்கப்படும் நிலையில் மருத்துவ நிபுணர்கள் இன்மையால் நெருக்கடி உருவாகின்றது.எனவே இந்த விடயத்தில் மாகாண சுகாதாரஅமைச்சு மற்றும் மத்திய சுகாதார அமைச்சு ஆகியன தலையீடு செய்து உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ச-33-55)




**புளியம்பொக்கணை நாகதம்பிரான் கோயில்ல பொலிஸ்காரர் செய்த குளறுபடியால சனம் போய் வரக் கஷ்டப்பட்ட விசயத்தை நேற்று பட்சி சொன்னதெல்லோ. அங்க பார்த்த இன்னொரு விசயம் தான் இண்டைக்கு.**

**பொதுவாக் கோயிலுக்குப் போறவையெல்லாம் மச்சம் சாப்பிடாமல் குளிச்சு வெளிக்கிட்டு, சாமியைக் கும்பிட்டு முடிச்ச பிறகு ஐஸ்கிறீம் கடைக்கும், கச்சான் கடைக்கும் படையெடுப்பினம். முக்கியமா பூசை முடிஞ்சபிறகு, ஐஸ்கிறீம் கடை, பிறகு அப்பிடியே காலாற நடந்தபடி மணிக்கடையளுக்குப் போய், விளையாட்டுச் சாமான்கள், தட்டுமுட்டுச் சாமான்கள் எல்லாம் வாங்கிக்கொண்டு வீட்டுக்கு வெளிக்கிடுவினம். இவ்வளவுகாலமும் இப்பிடித்தானே எங்கட ஆக்களின்ர கோயில் கும்பிடுகை இருந்தது. இப்ப அதுகும் மாறத்தொடங்கிட்டுது. இந்தமுறை புளியம்பொக்கணையில இரவுத்திருவிழாவுக்கு போனவையெல்லாம் மூஞ்சையில வந்து 'குப்' எண்டு அடிச்ச சாராய மணத்துக்குள்ளால நீந்திக் கடந்துதான் கோயிலுக்குள்ள போகமுடிஞ்சுது. இளம்பெடியள் கனபேர் ஏதோ தியேட்டருக்குப் போறமாதிரி கெட்டப்புகளோட, நிறைவெறியோட கோயில் முழுக்க கும்பலா நிண்டு தூசணமழை பொழிஞ்சபடி நிண்டிச்சினம். அது கோயில் எண்டதோ இல்லாட்டி அங்க பக்தியோட நிக்கவேணும் எண்டதோ அவைக்கு மண்டையில உறைச்சமாதிரித் தெரியேலை. ஏதோ ரூர் வந்தமாதிரிக் கத்துறதும், ஆக்களோட தனகுப்படுறதும், பொம்பிளையளோட வேணுமெண்டு வந்து உரஞ்சுப்படுறதும் எண்டு அவை தனியுலகத்தில இருந்தினம். இவையின்ர கூத்துகளை அடக்க வேண்டிய பொலிஸ்காரரும் சேர்ந்து நிண்டு பம்பலடிச்சுக்கொண்டிருந்தைப் பார்த்திட்டு 'கலி முத்திப்போட்டுது' எண்டு சனங்கள் சொல்லிக்கொண்டு போச்சினம்.**

**கோயிலுக்கு வந்த பெடியள்தான் இப்பிடி மாறிட்டினம் எண்டால் 'கோயிலுக்குப் போனால் ஐஸ்கிறீம் குடிக்கோணும்' எண்ட எங்கட ஆக்களின்ர மனநிலையும் மாறத்தொடங்கிட்டுது. இந்தமுறை புளியம்பொக்கணையில ஐஸ்கிறீம் கடையளிலையும், வாகனங்களிலையும் பெரிசாக் கூட்டமில்லை. ஆனால் கோயிலின்ர நாலு பக்க வீதியிலையும் சிலவாகனங்களைச் சுத்தி கோயில் பிரசாதம் வாங்க அடிபடுறமாதிரி சனங்கள் மொய்ச்சுக்கொண்டு நிண்டிச்சினம். என்னெண்டு போய்ப்பார்த்தால் அங்க விக்கிற நூடில்ஸுக்குத்தான் இவ்வளவு பிடுங்குப்பாடு. ஏதோ அந்த நூடில்ஸைச் சாப்பிட்டால்தான் சாமியின்ர அருள் கிடைக்கிறமாதிரி அவை நிண்டிச் சினம். அந்த நூடில்ஸை சாப்பிட்டுட்டு அப்பிடியே அதை கோயில் வீதி முழுக்க எறிஞ்சுபோட்டு கையாட்டிக்கொண்டு எல்லாரும் போய்க்கொண்டிருந்தினம். ஒருகட்டத்தில கோயில் வீதிமுழுக்க, நூடில்ஸ் கப் மயம். அதை விக்கிறவை, கப் போடுறதுக்கு ஒரு குப்பைக்கூடையை வாகனங்களுக்குப் பக்கத்தில வைச்சா குறைஞ்சோ போடுவினம்? உந்த வாக னங்களுக்கு பெர்மிசன் குடுக்கிறவை இனியாவது கழிவுகளைப் போட குப்பைக்கூடை வைக்கோணும் எண்டு இறுக்கமாச் சொல்லோணும்.**

**நடக்கிற நடப்பைப் பாக்க இனிமேல் கோயில் திருவிழாக்களை கார்னிவெல் களியாட்டம் மாதிரி எங்கட ஆக்கள் மாத்திப்போடுவினம்போல கிடக்கு. அவையிட்ட இருந்து கடவுள்மாரை ஆர்தான் காப்பாத்தப்போயினமோ?**

padsi@uthayan.com - பட்சி

# தவறான முடிவெடுத்து வயோதிபர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.17

பொலிகண்டி கிழக்குப் பகுதியைச் சேர்ந்த வயோதிபர் ஒருவர் தவறான முடிவெடுத்து நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை உயிரிழந்துள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த ஆறுமுகம் அரிபரநிதி (வயது -73) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வே.பாஸ்கரன் மேற்கொண்டார். (ச-22,100)

### சுற்றுலா வருமானம்

# முதல் காலாண்டில் ஒரு பில்லியன் டொலர்

2025 ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் இலங்கையின் மொத்த சுற்றுலா வருமானம் 1,122.3 மில்லியன் அமெரிக்க டொலராகப் பதிவாகியுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. 2025 மார்ச் மாதம் மட்டும் 354 மில்லியன் டொலர் சுற்றுலா வருமானமாகப் பதிவாகியுள்ளது. இதன்மூலம், இந்த ஆண்டின் முதல் காலாண்டில் சுற்றுலா வருமானம் ஒரு பில்லியன் டொலர் எல்லையைக் கடந்துள்ளது. 2024 ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் பெறப்பட்ட 1,025.9 மில்லியன் டொலர் வருமானத்துடன் ஒப்பிடுகையில், இது 9.4% அதிகரிப்பைக் காட்டுகிறது. (ச-இ)

### கடந்த போகத்தில்

# 20,470 தொன் நெல் யாழில் அறுவடை

யாழ்ப்பாணம்,ஏப்.17

யாழ். மாவட்டத்தில் கடந்த போகத்தின்போது 20 ஆயிரத்து 470.4 மெற்றிக் தொன் நெல் அறுவடைசெய்யப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் திருமதி தெய்வநாயகி உதயனுக்குத் தெரிவித்துள்ளார்.

கடந்தகால போகத்தின்போது அழிவு நீங்கலாக 8 ஆயிரத்து 913. 17 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் நெல் முழுமையாக அறுவடைசெய்யப்பட்டது. என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-22,125)

### ஐஸ் போதையுடன்

# கைதானவர்கள் விளக்கமறியலில்!



யாழ்ப்பாணம்,ஏப். 17

ஊர்காவற்றுறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாட்டிக் கடற்கரையில் ஐஸ் போதைப்பொருளுடன் கைதான இருவரை எதிர்வரும் 22 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. சாட்டிக் கடற்கரைப் பகுதியிலுள்ள பள்ளிவாசலுக்கு அருகாமையிலுள்ள தங்குமிட அறையொன்றிலிருந்து 31மற்றும் 32 வயதான இருவரை பொலிஸார் கைது செய்தனர். சந்தேகநபர்களிடமிருந்து 20 மில்லி கிராம் மற்றும் 30 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டன. சந்தேகநபர்களை ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தியபோது எதிர்வரும் 22 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டது.(ச-22,125)



### வீதி விபத்துகளில்

# 14 நாள்களில் 37 பேர் பலி!

கொழும்பு,ஏப்.17

இந்த மாதத்தின் கடந்த 14 நாள்களில் வீதி விபத்துகளால் 37 பேர் உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த விபத்துகளில் 99 பேர் படுகாயமடைந்துள்ளனர். 335 பேர் சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

அதேவேளை கடந்த இருநாள்களில் மாத்திரம் நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் இடம்பெற்ற வாகன விபத்துகளில் 7 பேர் உயிரிழந்துள்ளனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** திடீர் செலவுகள் ஏற்பட்டாலும், தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். வாழ்க்கைத் துணைவழியில் சங்கடம் தரக்கூடிய ஒரு செய்தி வந்து சேரும். உறவினர்களுடன் கருத்துவேறுபாடு ஏற்பட வாய்ப்பு உள்ளதால் பொறுமை அவசியம்.

**இடபம்:** இன்று பல வகைகளிலும் அனுகூலமான நாள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. அரசாங்கக்காரியங்கள் சாதகமாக முடியும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தந்தைவழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும்.

**மிதுனம்:** இன்று எதிர்பாராத பணவரவுக்கும் திடீர்செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. சிலருக்கு உறவினர்களுடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்புள்ளதால் அவர்களுடன் பேசும் போது வார்த்தைகளில் நிதானம் தேவை.

**கடகம்:** புதிய முயற்சிகளுக்கு சாதகமான நாள். நண்பர்களிடமிருந்து எதிர்பார்த்த தகவல் கிடைக்கும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டு. தந்தையின் தேவையை நிறைவேற்றும் வகையில் சிறிது அலைச்சல் ஏற்படக்கூடும்.

**சிம்மம்:** கையிருப்புக் கரைவதுடன் சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த பிணக்குகள் நீங்கும். உறவினர்களால் குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் சாதுர்யமாகச் சமாளித்து விடுவீர்கள்.

**கன்னி:** தந்தைவழி உறவுகளால் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். முக்கிய முடிவுகளை பிற்பகலுக்குமேல் மேற்கொள்வது சாதகமாகமுடியும். தொலைதூரத்திலிருந்து எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும்.

**துலாம்:** உங்கள் முயற்சிகளுக்கு உறவினர்கள் ஒத்துழைப்புத் தருவார்கள். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். ஆனால், எதிரிகள் வகையில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால் எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

**விருச்சிகம்:** வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது கவனமாக இருக்கவும். காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது.

**தனுசு:** எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலையே காணப்படும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளுக்காக செலவுசெய்யவேண்டிவரும்.

**மகரம்:** புதிய முயற்சி எதுவும் இன்றைக்கு வேண்டாம். அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். செலவுகளைச் சமாளிக்க கடன்வாங்கவேண்டிய சூழ்நிலையும் சிலருக்கு ஏற்படும். எதிர்பார்த்த பணம் கிடைப்பது தாமதமாகும்.

**கும்பம்:** பிற்பகலுக்குமேல் காரியங்கள் அனுகூலமாக முடியும். சகோதரர்களுக்காக செலவுசெய்யவேண்டிவரும். சிலருக்கு நண்பர்கள் மூலம் பணவரவு கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்குவரும். பிள்ளைகள் வழியில் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். அவர்களின் உடல் ஆரோக்கியத்திலும் கவனம்செலுத்தவும். நண்பர்களால் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டிவரும்.




சுப்பர் ஓவரில் வைத்து

# ராஜஸ்தான் றோயல்ஸை தோற்கடித்தது டெல்லி!

**ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில், சுப்பர் ஓவரில் வைத்து ராஜஸ்தான் றோயல்ஸை தோற்கடித்தது டெல்லி கப்பிட்டல்ஸ்.**

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ராஜஸ்தான் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய டெல்லி அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 188 ஓட்டங்களைப் பெற்றது. கடந்த ஆட்டத்தில் அபாரமாக விளையாடிய கருண் நாயர் நேற்று ஓட்டமெதையும் பெறாமல் ரண்அவுட் முறையில் ஆட்டமிழந்தார். அபிஷேக் போரல் அதிகபட்சமாக 49 ஓட்டங்களையும், கே.எல்.ராகுல் 38 ஓட்டங்களையும், ஸ்ரப்ஸ் மற்றும் அக்சர் பட்டேல் இருவரும் தலா 34 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குக் களமிறங்கிய ராஜஸ்தான் அணியும் 20 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 188 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இறுதி ஓவரில் 9 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியென்ற நிலையில், ஸ்ராக் அற்புதமாகப் பந்துவீசி எதிரணியைக் கட்டுப்படுத்தினார். அதிகபட்சமாக, ராணா, ஜெயஸ்வால் இருவரும் தலா 51 ஓட்டங்களைப் பெற்றனர்.

**சுப்பர் ஓவர்**

சுப்பர் ஓவரில் முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் 5 பந்துகளில் 11 ஓட்டங்களைப் பெற்று இரண்டு விக்கெட்களை இழந்தது. சுப்பர் ஓவரில் இரண்டு விக்கெட்களை இழந்தால், அது அனைத்து விக்கெட்களையும் இழந்தமைக்கு நிகராகக் கருதப்படும். ஆதலால், டெல்லிக்கு 12 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயமானது. கே.எல்.ராகுல் மற்றும் ஸ்ரப்ஸ் இருவரும் களமிறங்கினார்கள். முதல் மூன்று பந்துகளில் 2, 4, 1 என 7 ஓட்டங்களைப் பெற்றார் ராகுல். நான்காவது பந்தை சிக்சருக்கு அனுப்பி ஆட்டத்தை வெற்றியுடன் முடித்தார் ஸ்ரப்ஸ். (ம)




# 'வேரினை நோக்கிய விழுதுகள்' நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஏப். 17

இணுவில் கலை இலக்கிய வட்டம், இணுவில் அறிவாலயம் ஆகியவற்றின் இணை ஏற்பாட்டில், 'வேரினை நோக்கிய விழுதுகள்' நூல் வெளியீட்டுவிழா இணுவில் அறிவாலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அறிவாலயத்தின் தலைவர் வாழ்நாள் பேராசிரியர் வ.மகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் நூலின் வெளியீட்டுரையை பேராசிரியர் கந்தையா ஸ்ரீகணேசன் ஆற்றுவார்.

நூலின் மதிப்புரைகளை யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் ச.சிவலிங்கராஜா, வலிகாமம் கல்வி வலய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் ம.பா. மகாலிங்கம் ஆகியோர் ஆற்றுவர். (ச-25)

# அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம் , ஏப். 17

யாழ். அளவெட்டி பெருமாக்கடவை அருள்மிகு ஸ்ரீ ஆதி துர்க்கை அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவப் பெருவிழா, எதிர்வரும் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 12 தினங்கள் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் மே மாதம் 3 ஆம் திகதி சனிக்கிழமை விசேட பூஜைகளுடன் சங்காபிஷேகம் இடம்பெறும். நண்பகல் மாகேஸ்வரப் பூஜையும் மாலை திருவூஞ்சலும் பாட்டும் நடைபெற்று அம்பாள் வீதியுலா வரும் காட்சி இடம் பெறும். மறுநாள் வைரவர் பூஜையுடன் விழா நிறைவுபெறவுள்ளது. (ச-25, 63)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்ட தரப்புகள் நீதிமன்றத் தீர்ப்பு நகல்களைச் சமர்ப்பிக்குக

## தேர்தல்கள் ஆணைக்குழு கோரிக்கை

கொழும்பு, ஏப்.17

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக நீதிமன்றத்தை நாடிய தரப்புகள், தொடர்புடைய நீதிமன்ற வழக்குகள் மற்றும் தீர்ப்புகளின் நகல்களை உரிய மாவட்டத் தேர்தல் அலுவலகங்களுக்குச் சமர்ப்பிக்குமாறு தேர்தல் ஆணைக்குழு அனைத்து அரசியற்கட்சிகள் மற்றும் சுயேச்சைக்குழுக்களிடமும் கோரிக்கை விடுத்துள்ளது.

தேர்தல் ஆணைக்குழு நேரடியாக தலையிட்டு, நீதிமன்றங்களிடமிருந்து தொடர்புடைய தகவல்களைப் பெறுவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டுவருகிறது.

எனினும் அதில் காலதாமதம் ஏற்படலாம் என்பதாலேயே இவ்வாறு வழக்குத் தொடர்ந்த தரப்புகளை உடனடியாகத் தீர்ப்பு நகல்களை அந்தந்த மாவட்டத் தேர்தல் அலுவலகங்களில் சமர்ப்பிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது, இந்த நீதிமன்றத் தீர்ப்புகளை ஆய்வுசெய்த பிறகு, உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான இறுதிமுடிவை தேர்தல் ஆணைக்குழு வெளியிடும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-சி)

# மோடி திறந்த சேமிப்பு வளாகம் இயங்கு நிலையில் இல்லை

## ஹர்ஷ டி சில்வா குற்றச்சாட்டு



கொழும்பு, ஏப்.17

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கை வந்தபோது திறக்கப்பட்ட தம்புள்ளவில் உள்ள வெப்பநிலை மற்றும் ஈரப்பதம் கட்டுப்படுத்தப்பட்ட விவசாய சேமிப்பு வளாகம் செயற்படும் நிலையில் இல்லை என்று எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

தற்போதைய அரசாங்கம் இந்த சேமிப்பு வளாகம் திறக்கப்பட்டுள்ளது என்று கூறி மக்களை ஏமாற்றியுள்ளது. வெப்பநிலை மற்றும் ஈரப்பதத்தைக் கட்டுப்படுத்த 5 ஆயிரம் மெட்ரிக் தொன் கொள்ளளவு கொண்ட தம்புள்ளை விவசாய சேமிப்பு வளாகத்தின் கட்டுமானப் பணிகள், 2019 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கத்தின்போது, நான் பொருளாதார சீர்திருத்தங்கள் மற்றும் பொது விநியோக அமைச்சராகப் பதவிவகித்த போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்த வளாகம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வந்தபோது இணைய வழியில் திறக்கப்பட்டது- என்றார். (எ-இ)

# சுப்பர் ஸ்டார் ரஜினிக்கு மதுரையில் கோயில்



சென்னை, ஏப்.17

தமிழ்நாட்டில் ரஜினி ரசிகர்கள், சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்துக்கு கோயில் கட்டியுள்ளனர். மதுரை திருமங்கலத்தில் இந்தக் கோயில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கோயிலுக்கு திருமங்கலம் ஸ்ரீ ரஜினி கோவில் எனப்பெயர் சூட்டப்பட் டுள்ளது. கோட் சூட்டுடன் கம்பீரமாக நிற்கும் ரஜினிக்கு வருடப் பிறப்பன்று விசேட அபிஷேகமும் பொங்கல் பூசையும் இடம்பெற்றன. (ச-25, 6)

## மஹியங்கனையில்

# துப்பாக்கிச்சூடு; ஒருவர் காயம்



பதுளை,ஏப்.17

மஹியங்கனைப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் காயமடைந்து தற்போது சிகிச்சைகளுக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இரு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசுவாவசு
# தமிழ்ப் புத்தாண்டு பலன்கள் - 2025




## வெற்றி மேல் வெற்றி

**மிதுன ராசிக்காரர்களுக்கு,**

எதிர்பார்க்காத நல்ல விஷயங்கள் நடக்கும். சனிக்கிழமையில் பசு மாட்டுக்கு உணவுகொடுப்பது அனுகூலத்தை தரும். இரத்த அழுத்தம், இரத்த நாளங்களில் அடைப்பில்லாமல் பார்த்துக் கொள்வது நல்லது. உணவு முறை, மருத்துவ ஆலோசனை எடுத்துக்கொள்வது நல்லது. உத்தியோக மாற்றம், இடமாற்றம், வீடு மாற்றம், தொழில் மாற்றம், படிப்பு மாற்றம் ஒன்றன்பின் ஒன்றாக ஏற்படுவது அனுகூலத்தை ஏற்படுத்தித் தரும். பிள்ளைகள் விடயத்தில் இருந்து வந்த பிரச்சினைகள் பரிபூரண நிவர்த்தியாகும். பிள்ளைகளின் படிப்பு, தொழில், உத்தியோகம், வியாபாரத்தில் பெரிய நிம்மதி ஏற்படும். துணையின் நீண்டநாள் கனவுகளை நிறைவேற்றும் அற்புதமான காலகட்டமாக இருக்கும். தள்ளிப்போன சுபகாரியங்கள் கைகூடிவரும். அடுக்கடுக்கான பிரச்சினைகளால் நிலைகுலைந்த நிலை மாறி, இனி உங்களுக்கு எல்லாமே நல்லதாகவே நடக்கும்.

கிடப்பில் கிடந்த பல காரியங்களை முழுமூச்சுடன் முடித்துக்காட்டுவீர்கள். தந்தைவழி சொத்துப்பிரச்சினை முடிவுக்கு வரும். மனைவியுடன் வீண்வாக்குவாதங்கள் வந்து போகும். என்றாலும் மனைவிவழியில் ஆதரவு பெருகும். சிறுசிறு அறுவை சிகிச்சை வந்து நீங்கும். அரைகுறையாக நின்றுபோன வீட்டை முழுமையாக கட்டிமுடிக்க வங்கியில் கடன் கிடைக்கும். பழைய நண்பர்கள் தேடிவருவார்கள். வழக்குகளில் கவனம் தேவை. இரவுநேரப் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது.

தனிப்பட்ட முறையில் செல்வாக்கு உயரும். திருமணத்தடைகள் நீங்கி சுபிட்மான காலகட்டமாக இருக்கும். சுப காரியங்களை முடித்துக் கொள்வது நல்லது.

குருவின் பரிபூரண அருள் இருக்கக்கூடிய ஆண்டாக இருக்கும். உத்தியோகத்தில் வெற்றி ஏற்படும். புதிய வேலைவாய்ப்புகள் உண்டாகும்.

திருமண யோகம், குழந்தை யோகம் உண்டாகும். குரு பார்வை இருப்பதால் பூர்வீக சொத்துகள் கிடைப்பதற்கான யோகம் உண்டாகும். மனைவி, கணவனின் ஆரோக்கியத்தில் இருந்து வந்த பிரச்சனைகள் சரியாகும், குடும்பத்தில் அதீத மகிழ்ச்சியை அனுபவிக்கும் யோகம் உண்டாகும்.

உத்தியோகத்தில் மேலதிகாரிக்கு நெருக்கமாவீர்கள். உங்களை நம்பி பெரிய பொறுப்புகளை ஒப்படைப்பார். வேலைச்சுமை அதிகமாக இருந்தாலும் கவலையின்றி முடிப்பீர்கள். சில பணிகளை போராடி முடிக்க வேண்டி வரும். சக ஊழியர்களால் மதிப்பு, மரியாதை கூடும். புது சலுகைகளும், சம்பள உயர்வும் உள்ளது. கலைஞர்களுக்கு தள்ளித்தள்ளிப் போன வாய்ப்புகள் இனித் தேடி வரும். வீண் விமர்சனம், வதந்தியிலிருந்து விடுபடுவீர்கள். புது உத்வேகத்துடன் செயற்படுவீர்கள்.

**மொத்தத்தில் இந்தத் தமிழ்ப் புத்தாண்டு, தடைகளைத் தாண்டி சாதிக்க வைப்பதாக அமையும்.**

# தமிழ் மக்களை இனிமேல் பிரித்தெடுக்கமுடியாதாம்
## விஜித ஹேரத் கூறுகின்றார்

கொழும்பு, ஏப்.17

வடக்கு தமிழ்க் கட்சியினர் எம்மை விமர்சிப்பதால் அவர்கள் எதனையும் சாதிக்க முடியாது. எமது பக்கம் வந்துள்ள தமிழ் மக்களை இந்த விமர்சனங்களால் தமது பக்கம் மீண்டும் இழுக்க தமிழ்க் கட்சியினரால் முடியாது என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.


இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது


வடக்குத் தமிழ் மக்கள் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு அமோக ஆதரவை வழங்கியுள்ளார்கள். தமிழ் மக்கள், நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் எமது கட்சிக்கு ஆதரவு வழங்குவதைத் தடுக்கும் வகையில் வடக்குத் தமிழ்க் கட்சிகளின் முக்கியஸ்தர் கள் என்று சொல்லப்படுபவர்கள், நான் உள்ளிட்ட எமது கட்சியின் உறுப்பினர்களைத் தற்போது விமர்சித்து வருகின்றார்கள்.

இந்த விமர்சனங்களால் அவர்கள் எதனையும் சாதிக்க முடியாது. எமது பக்கம் வந்துள்ள தமிழ் மக்களை தமது பக்கம் மீண்டும் இழுக்க அவர்களால் முடியாது. வடக்கு தமிழ் மக்கள் விழிப்புடன் இருக்கின்றார்கள். இந்த மக்களின் அரசியல், பொருளாதார ரீதியிலான கோரிக்கைகளை நாம் நிறைவேற்றுவோம். எம்மை நம்பி வரும் மக்கள் எவரையும் நாம் கைவிட மாட்டோம் - என்றார். (எ-இ)



தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தைச் சூழத் தங்கிவாழ்கின்ற மூத்தோர்களுக்குச் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு வழமைபோன்று இந்த வருடமும் சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால் புத்தாடைகள் வழங்கப்பட்டன. சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் சந்நிதியான் ஆச்சிரமத்தில் வைத்துப் புத்தாடைகளை வழங்கினார். (எ-66)






வேகம் கணிக்கும் நவீன இயந்திரம் மூலம் போக்குவரத்து விதிமுறைகளை மீறி அதிவேகமாக வாகனம் செலுத்தும் சாரதிகளை இனங்கண்டு அவர்களுக்கெதிராகத் தண்டப் பணம் அறவிடும் நடவடிக்கையில் நேற்று கிளிநொச்சி பொலிஸார் ஈடுபட்டனர். இதன்போது வேகமாக வாகனம் செலுத்திய பல சாரதிகளுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்பட்டது. (ச-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

உறுதியைப்போல உழைப்பும் இருந்தால்
நீ வெற்றிகாணுவாய்.

– ஷெல்லி –

# இன்னும் துயிலெழாத நீதி!

யாழ்ப்பாணம் -செம்மணிப் புதைகுழிக்கான நிதிவிடுவிப்பை மேற்கொள்வதில் அரசாங்கம் வேண்டுமென்றே பாராமுகமாக இருக்கின்றது என்று குற்றஞ்சாட்டியுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம். ஸ்ரீலங்கா இராணுவத்தால் கொல்லப்பட்ட நூற்றுக் கணக்கான தமிழர்கள் புதைக்கப்பட்ட இடமான செம்மணியை, உண்மையின் கண்களில் இருந்து தொலைதூரத்தில் நகர்த்திவிடுவதற்கு, கடந்த அரசாங்கங்களைப் போலவே தற்போதைய அரசாங்கமும் முயல்கின்றது என்ற ஆதங்கத்தையும் அவர் பதிவுசெய்திருக்கின்றார்.

வடக்கு -கிழக்கில் ஸ்ரீலங்கா இராணுவத்தால் மக்கள் கொன்றுபுதைக்கப்பட்ட பகுதிகளில் செம்மணியும் ஒன்று. வரலாறு நெடுகிலும் செம்மணிப் புதைகுழி சர்ச்சைக்குரியதாகவே இருந்துவருகின்றது. அநுர அரசின் காலத்தில், அங்கிருந்து சில மனிதச் சிதிலங்கள் மீட்கப்பட்டன. ஆதலால், புதைகுழிகளின் வலியறிந்த அரசாங்கம் இதற்கு ஒரு நடவடிக்கை எடுத்தே தீரும் என்று தமிழர்கள் எதிர்பார்த்தனர். அந்த எதிர்பார்ப்புகள் அனைத்தும் தற்போது பொய்த்துப்போய்வருகின்றன. பிரச்சினைகளும், பின்னணிகளும், வலிகளும்கூட ஒன்றாக இருந்தாலும், வடக்குக்கு ஒரு நீதி, தெற்குக்கு ஒரு நீதி என்பதைத்தான் அநுர அரசாங்கத்தின் இந்தத் தாமதம் கட்டியம் செய்கின்றது. பட்டலந்த வதைமுகாம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் நாள்கணக்கில் விவாதிக்கின்றனர். அது விவாதிக்கப்படத்தான் வேண்டும். அதை மறுக்கவோ அல்லது தவிர்க்கவோ கூடாது. ஆனால், தம்முடன் தொடர்புடைய பட்டலந்த விவகாரத்தை, நாடாளுமன்றத்தில் தனிவிவாதம் நடத்தும் அளவுக்குக் காட்டிய முக்கியத்துவத்தில், பாதியையேனும், அந்த வதைமுகாமின் வலிகளுக்குக் கொஞ்சமும் குறைவில்லாத செம்மணிப் புதைகுழி விவகாரத்தில் அரசாங்கத்தால் காட்டமுடிந்ததா? இந்த விவகாரங்களை அரசாங்கம் எத்தகைய அளவுகோலால் அளக்கின்றது?

புதைகுழிகளுக்கான நீதி, புதிய அரசியலமைப்பு, பயங்கரவாதத் தடைச்சட்ட நீக்கம், அரசியற் கைதிகளின் விடுவிப்பு, காணாமற்போனோருக்கான நீதி, காணி விடுவிப்பு மற்றும் பௌத்த மயமாக்கல் நீக்கம் ஆகியவற்றில் காத்திரமான தீர்வுகளையும் தீர்மானங்களையும் மேற்கொள்ளவேண்டும் என்பதைத்தான் தமிழர்கள் அநுர அராங்கத்திடம் எதிர்பார்க்கின்றனர். ஆறு மாதங்களுக்கு முன்னர், ஜனாதிபதித் தேர்தலுக்காகவும், நாடாளுமன்றத் தேர்தலுக்காகவும் ஜனாதிபதி அநுரவும், தேசிய மக்கள் சக்தியினரும் வடக்குக்கு வந்தபோது, இந்தப் பிரச்சினைகள் எந்த மட்டத்தில் இருந்தனவோ, அந்தப் பிரச்சினைகள் தற்போதும் அதே மட்டத்தில்தான் காணப்படுகின்றன. உயர் பாதுகாப்பு வலயத்தில் ஓரிரு வீதிகளை கடும் நிபந்தனைகளுக்கு அமைய பகுதியளவில் திறந்துவிட்டிருப்பது (விடுவிக்கப்படுதல் அல்ல) ஒருபோதும் தமிழர்களுக் கான தீர்வு என்றாகாது. இந்தப் புரிதல் தமிழர்களிடம் தாராளமாகவே உள்ளது. தமக்கு எந்தப் பயனும் இல்லை என்பதால், தமிழ்த் தேசியக் கட்சிகளையே தூக்கியெறிந்தவர்கள்தான் தமிழர்கள். அநுர வுக்கும், அவரின் அரசாங்கத்துக்கும் நிபந்தனையற்ற ஆதரவை வழங்கவேண்டும் என்று எந்த அவசியமும் தமிழர்களுக்கு இல்லை. அபிலாஷைகள் நிறைவேற்றப்படாவிடில், அநுர அரசைத் தூக்கியெறிவது தமிழர்களுக்கு ஒன்றும் அவ்வளவு சிரமமான விடயம் அல்ல.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com




# 20 மாவட்டங்களுக்கு வெப்ப எச்சரிக்கை!



கொழும்பு,ஏப்.17

**நாடளாவிய ரீதியில் 20க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் கடும் வெப்பமான வானிலை நிலவும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

அதன்படி,வடக்கு, வடமத்திய, வடமேற்கு, மேற்கு, தெற்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் சில பகுதிகளிலும், இரத்தினபுரி மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் மனித உடலால் உணரப்படும் வெப்பநிலை 'எச்சரிக்கை நிலை' வரை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வெப்பத்தால் ஏற்படும் பக்கவாதம் போன்ற நோய்களைத் தவிர்க்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மக்கள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

நிழலான இடங்களில் அடிக்கடி ஓய்வு எடுக்கவும். அதிகளவு நீர் பருகவும் அதிக வெப்பத்தால் பாதிக்கப்படக்கூடிய வயதானவர்கள் மற்றும் நோய்வாய்ப்பட்டவர்கள் கவனமாக இருக்கவும். வெளியில் செல்லும்போது வெள்ளை அல்லது வெளிர்நிற ஆடைகளை அணிந்துசெல்லுங்கள் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

# கம்பஹாவில் துப்பாக்கிச்சூடு

கொழும்பு,ஏப்.17

கம்பஹா நகர பேருந்து நிலையத்துக்கு அருகில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு துப்பாக்கிச்சூட்டுச் சம்பவமொன்று பதிவாகியுள்ளது.

பொலிஸாரின் முதற்கட்ட தகவலின்படி, மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத இருவர், ஓடிக்கொண்டிருந்த சிறிய லொறியொன்றின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுவிட்டு தப்பிச்சென்றுள்ளனர் எனக் கூறப்படுகிறது. சம்பவத்தின்போது லொறியில் இருந்த இருவர் வாகனத்தைவிட்டு வெளியேறி அருகிலிருந்த கடைக்குள் ஓடியதால் அவர்களுக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கம்பஹா பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ச-இ)

# வெளிநாடு செல்லும் இலங்கையர் உயர்வு

கொழும்பு,ஏப்.17

கடந்த வருடத்தில் மாத்திரம் 3 இலட்சத்து 14 ஆயிரத்து 828 இலங்கையர்கள் தொழில் நிமித்தம் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது இந்த எண்ணிக்கையானது 5.8சதவீதம்அதிகமாகுமென வெளிநாட்டு வேலைவாய்ப்புப்பணியகம் தெரிவித்துள்ளது. (ச-இ)

# தேர்தல் விதிமீறல் 132 முறைப்பாடுகள்

2025 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் மார்ச் மாதம் 3 ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதிவரை 168 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. அதன்படி, தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 132 முறைப்பாடுகளும் தேர்தலுடன் தொடர்புடைய ஏனைய குற்றங்கள் தொடர்பில் 36 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன. தேர்தல் சட்டங்களை மீறியமை மற்றும் தேர்தலுடன் தொடர்புடைய ஏனைய குற்றங்கள் தொடர்பில் 18 வேட்பாளர்களும் 61 சந்தேகநபர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)



# சிறையதிகாரி கொலை சந்தேகநபர் சிக்கினார்

கொழும்பு,ஏப்.17

பூஸா சிறைச்சாலையின் ஓய்வுபெற்ற சிறை அதிகாரியைச் சுட்டுக்கொன்ற சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் போலிக்கடவுச்சீட்டைப் பயன்படுத்தி தாய்லாந்துக்கு நேற்றுமுன்தினம் செல்ல முயன்ற வேளை, கட்டுநாயக்க விமானநிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச-இ)

நாளை
வெள்ளிக்கிழமை -சித்திரை 05
18.04.2025
சுபநேரம் : 07.34 - 09.04
ராகுகாலம் : 01.34 - 03.04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வவு.பாடசாலைகள் மட்ட உதைபந்தாட்டப் போட்டி



வவுனியா,ஏப்.17

வவுனியா மாவட்ட பாடசாலைகள் உதைபந்தாட்ட சங்கத்தின் ஏற்பாட்டில், அமரர் சௌந்தநாயகம் ஞாபகார்த்த உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகள் வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டு மைதானத்தில் நேற்றுப் புதன்கிழமை ஆரம்பமாகின. சங்கத்தின் இணைப்பாளர் இ.சற்சொரூபன் தலைமையில் இடம்பெற்றுவரும் இந்தப்போட்டிகளின் ஆரம்ப நிகழ்வில் முதன்மை அதிதியாக வவுனியா உதவி மாவட்டச் செயலாளர் ம.சபர்ஜா, சிறப்பு அதிதிகளாக பிரதிகல்விப்பணிப்பாளர் பி.ஞானராஜ், ஆசிரிய ஆலோசகர் யூட் பரதமாறன், ஓய்வுநிலை உடற்கல்வி ஆசிரியை சாந்தினி சேவியர் ஆகியோர் கலந்துகொண்டனர். போட்டியில் பல்வேறு பாடசாலைகளைச் சேர்ந்த 16 வயதுக்குட்பட்ட ஆண், பெண் வீரர்களைக் கொண்ட உதைபந்தாட்ட அணிகள் பங்குபற்றியிருந்தன. இறுதிப்போட்டிகள் இன்று வியாழக்கிழமை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-25,110)

## வீதி நாடகம் அரங்கேற்றம்

பளை, ஏப். 17

வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், பச்சிலைப்பள்ளிப் பிரதேச கங்கைத்தமிழ் கலாமன்றக் கலைஞர்களின் வீதி நாடகம் பிரதேசத்தின் பல கிராம அலுவலர் பிரிவுகளில் நடத்தப்பட்டுவருகிறது. புலோப்பளை மேற்கு, புலோப்பளை கிழக்கு, அல்லிப்பளை, பளை நகரம், தம்பகாமம், முல்லையடி, இத்தாவில், கச்சார்வெளி போன்ற கிராம அலுவலர் பிரிவுகளிலும் மற்றும் புலோப்பளை மேற்குக் கிராம அலுவலர் அலுவலகத்திலும் வீதி நாடகம் அண்மையில் நிகழ்த்தப் பட்டது. தற்கால சமூக பண்பாட்டுச் சீரழிவுகளை எடுத்துக் காட்டி "எமது பண்பாட்டுப் பாரம்பரியங்கள் ஆரோக்கியமான வாழ்விற்கு வழிவகுக்கும்" எனும் கருப்பொருளினை மையமாகக்கொண்டு குறித்த வீதி நாடகம் நிகழ்த்தப் பட்டது. (ச-25,9)



யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் விசுவாவசு சித்திரைப் புத்தாண்டு நிகழ்வுகள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி த.சத்தியமூர்த்தி தலைமையில் கடந்த திங்கட்கிழமை சிறப்பாக நடைபெற்றது. (ச-22,66)

## புத்தாண்டு விழா

அனலைதீவு, ஏப்.17

அனலைதீவு அருணோதயா விளையாட்டுக்கழகம், அருணோதயா முன்பள்ளி, அருணோதயா கல்வி முன்னேற்றக் கழகம், அருணோதயா இயல் இசை நாடக மன்றம் ஆகியவற்றின் இணை ஏற்பாட்டில், ஆர்.ஆர் பிரதர்ஸ் நற்பணிமன்றத்தின் நிதி அனுசரனையுடன் சித்திரைப் புத்தாண்டு விழா, சனசமூக நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. (ச-25,9)





புத்தாண்டை முன்னிட்டு நல்லூர்ச் சங்கிலியன் சனசமூக நிலையத்துக்கும், திருநெல்வேலி வாலையம்மன் சனசமூக நிலையத்துக்கும் இடையே நடைபெற்ற துடுப்பாட்டப்போட்டியில் நல்லூர் சங்கிலியன் சனசமூக நிலைய அணி வெற்றிக்கிண்ணத்தைப் சுவீகரித்துக் கொண்டது. குறித்த போட்டி செங்குந்தா இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. (ச-25)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நிதி ஒதுக்கீடுகளைக்காட்டி ஜனாதிபதி மிரட்டக்கூடாது!

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு



கொழும்பு, ஏப்.17

தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களை உள்ளூராட்சிமன்றங்களுக்குத் தெரிவுசெய்தால் மட்டுமே அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கப்படும் என்று ஜனாதிபதி குறிப்பிடுவது அவரது பதவிக்கு அழகல்ல, மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்கு அரசாங்கம் ஏன் பெரும்பான்மைப் பலத்தைப் பயன்படுத்துவதில்லை? என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வியெழுப்பியுள்ளார்.

நீர்கொழும்பில் நடைபெற்ற உள்ளூராட்சிச்சபைத் தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஆளும் கட்சியான தேசிய மக்கள் சக்தி பொய்யுரைப்பதை பிரதான அரசியல் கொள்கையாகவும், முழுநேர வேலையாகவும் கொண்டுள்ளது. ஆட்சிக்கு வந்ததன் பின்னரும் பொய்யுரைப்பதையும், மக்களைத் தவறாக வழிநடத்துவதையும் அரசாங்கம் நிறுத்திக் கொள்ளவில்லை.

தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கம் ஆட்சிக்கு வந்து 6 மாதங்கள் நிறைவடைந்துள்ள நிலையில் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் எவற்றுக்கும் தீர்வு பெற்றுக்கொடுக்கவில்லை. எதிர்க்கட்சிகளை முடக்குவதற்காகவே இந்த அரசாங்கமும் பெரும்பான்மைப்பலத்தைப் பயன்படுத்துகிறது. மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்கு ஏன் பெரும்பான்மைப் பலத்தைப் பயன் படுத்த முடியாது? தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களை உள்ளூராட்சிமன்றங்களுக்குத் தெரிவுசெய்தால் மாத்திரமே அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கப்படும் என்று ஜனாதிபதி குறிப்பிடுவது அவரது பதவிக்கு அழகல்ல- என்றார். (எ-இ)

# குளிர்த்தி

யாழ்ப்பாணம், ஏப்.17

பருத்தித்துறை கோட்டுவாசல் சண்டிகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை குளிர்த்தி அபிஷேகம் இடம்பெறவுள்ளது.

சண்டிகா பரமேஸ்வரி அம்மன் குளிர்த்தி அபிஷேகத்தை முன்னிட்டு காலை 9 மணிக்கு கிரியைகளுடன் ஆரம்பமாகி காலை 10 மணிக்கு விசேட பூசை இடம்பெறவுள்ளது.

அம்பிகை அடியவர்கள் இளநீர், பால், பழவகைகள், தயிர், பூ, மாலை மற்றும் அபிஷேகத் திரவியங்கள் என்பவற்றைக் கொடுத்து அம்பாளின் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யுமாறு ஆலய நிர்வாகத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (ச-100)

# ஐஸ் போதையுடன் சந்தேகநபர் கைது

கொழும்பு, ஏப்.17

ஐஸ் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டாரெனச் சந்தேகிக்கப்படும் ஒருவர் மட்டக்குளிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெமுனுபுரப் பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு வடக்கு மாவட்டக் குற்றவியல் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையிலேயே 35 வயதான சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.

அவரிடமிருந்து 253 .4 கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன என மட்டக்குளிப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-சி)

# கடலில் குளிக்கச் சென்ற இரு இளைஞர்கள் சாவு



கொழும்பு,ஏப்.17

பானம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பானம கழிமுகத்துக்கு அருகிலுள்ள கடற்கரையில் குளிக்கச் சென்ற இரண்டு இளைஞர்கள் கடலலை அழித்துச் சென்ற நிலையில் உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடந்துள்ளது.

பானமவின் மத்திய பகுதியைச் சேர்ந்த 18 வயதுடைய இளைஞர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனரெனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)


## விலைக்கேள்விக்கான கோரல்(2025/01)
## நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம், வடமாகாணம்.

1. நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம், வடமாகாணம் சார்பாக திணைக்களப் பெறுகைக்குழுவின் தவிசாளர் கீழ் வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கு தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து மூடப்பட்ட கடித உறையில் விலைக்கேள்விகளைக் கோருகின்றார்கள்.
2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் மூலம் நடாத்தப்படும்.
3. விலைக்கேள்வியாளர்கள், நிர்மாணத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்
விலைக்கேள்வியாளர்கள் பொது கென்றாக்ற் சட்டம் 1987 ல் 03 ன் பிரகாரம் பதிவினை மேற் கொண்டிருக்க வேண்டும்.
4. தகைமை பற்றிய தகவல்கள் பெறுகை ஆவணத்தின் பகுதி 04 ல் குறிப்பிடப்பட்டுள்ளதோடு மேலதிக தகைமைத் தேவைகள் SBD 3 ற்கமைவாக பெறுகை ஆவணத்தின் பகுதி 05 இலும் (Schedule) குறிப்பிடப்பட்டுள்ளன.
5. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர்கள் கீழே 6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில் மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன், அம் முகவரியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணிவரை அலுவலக நாட்களில் 2025.04.17ல் இருந்து 2025.04.30 ஆம் திகதி வரை விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.
6. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை ஆணையாளர், நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம், வடமாகாணம், மீனாட்சி அம்மன் வீதி, பண்ணை, யாழ்ப்பாணம் (தொலைபேசி இல: 021-205 7102.021-222 4782, தொலைநகல் 021-205 7103) எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை கீழே அட்டவணையில் காட்டப்பட்ட 2025.04.17ல் ,ருந்து 2025.04.30 ஆம் திகதி வரை சமர்ப்பித்து கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான மீளளிக்கப்படாத தொகையினை பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. விலைக்கேள்விகள் (மூலம்,பிரதி) கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட திகதி மு.ப 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தவிசாளர், திணைக்களப்பெறுகைக்குழு, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம், வடமாகாணம், மீனாட்சி அம்மன் வீதி, பண்ணை, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக்கேள்விகள், அவைகளை மூடியவுடன் மேலேயுள்ள முகவரியில் சமூகமளித்திருக்கும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.
8. விலைக்கேள்விக்கு முன்னரான கூட்டம் மேலே 6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில் பி.ப 2.30 மணிக்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு 2024.04.23 ஆந் திகதியில் நடைபெறும்
9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு ,ணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Document Issuing/Purchasing Period | | | From 2025-04-17 To 2025-04-30 | | | | |
| | Pre-Bid Conference | | | At 2.30 P.M on 2025-04-23 | | | | |
| | Closing and Opening of Bids | | | At 10.30 A.M on 2025-05-02 | | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period |
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| MRC/NP/B/ DOP/VA/01 | Renovation and painting work for the District Probation Office at Vavuniya. | 4.24 | 75 | C8 or above (Buildings) | 3,000.00 | 43,000.00 | 18/07/2025 | 20/06/2025 |
| MRC/NP/B/ DOP/MU/01 | Renovation and painting work for the District Probation Office at Mullaitivu. | 2.54 | 45 | C8 or above (Buildings) | 2,000.00 | 26,000.00 | 18/07/2025 | 20/06/2025 |
| MRC/NP/B/ DOP/MN/01 | Renovation and repair work for the District Probation Office at Mannar. | 4.89 | 75 | C8 or above (Buildings) | 3,000.00 | 49,000.00 | 18/07/2025 | 20/06/2025 |
| MRC/NP/B/ DOP/KN/01 | Renovation and repair work for the District Probation Office at Kilinochchi. | 2.04 | 70 | C8 or above (Buildings) | 2,000.00 | 21,000.00 | 18/07/2025 | 20/06/2025 |
| MRC/NP/B/ DOP/KN/02 | Renovation and repair work of Nanthavanam Safe House at Kilinochchi. | 7.00 | 120 | C7 or above (Buildings) | 4,000.00 | 70,000.00 | 15/08/2025 | 18/07/2025 |
| MRC/NP/B/ DOP/JA/01 | Installation of Water tank stand (1000 lit. PVC water tank) for Kitchen at Certified School, Atchuvely. | 1.02 | 30 | C9 or above (Buildings) | 2,000.00 | 11,000.00 | 18/07/2025 | 20/06/2025 |
| MRC/NP/B/ DOP/JA/02 | Refurbishment of Training Centre Building at Certified School, Atchuvely. | 3.70 | 60 | C8 or above (Buildings) | 3,000.00 | 37,000.00 | 18/07/2025 | 20/06/2025 |

தவிசாளர்,
திணைக்களப் பெறுகைக்குழு,
நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம், வடமாகாணம்,
மீனாட்சி அம்மன்வீதி, பண்ணை, யாழ்ப்பாணம்.
17.04.2025


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.கலாசார மண்டபத்தை மாநகரசபையிடம் கையளிக்குக

## நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் கோரிக்கை

**யாழ்ப்பாணம், ஏப். 17**

**இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியில் கட்டப்பட்டு இந்திய அர சாங்கத்தால் பராமரிப்புச் செய்யப்பட்டுவருகின்ற யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தை, யாழ்ப்பாணம் மாநகரசபை எதிர்காலத்தில் விரைந்து பொறுப்பேற்பதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று ஆளுநர் சுட்டிக்காட்டியுள்ளார்.**

யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தை, யாழ். மாநகரசபை எதிர்காலத்தில் இயக்குவது தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் வட மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இதன்போது ஆளுநர், யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தின் பராமரிப்புக்குரிய பொறுப்பை இந்திய அரசாங்கம் 5 ஆண்டுகளுக்கு ஏற்றிருந்த நிலையில் அதில் 4 ஆண்டுகள் வரையில் நிறைவுபெற்றுள்ளன. எதிர்காலத்தில் யாழ். மாநகர சபை அதனைக் கொண்டுநடத்துவதற்குரிய ஒழுங்குகள் முன்னெடுக்கப்படுகின்றன -என்றார்.

இதன்போது இந்தியத் துணைத்தூதுவர் கருத்து வெளியிடுகையில், இந்தக் கலாசார மண்டபத்தை இயக்குவதற்கான இணை முகாமைத்துவக் குழுவின் கூட்டம் 2023ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தின் பின்னர் நடத்தப்படவில்லை. இந்தக் கூட்டம் எவ்வளவு விரைவாக இடம்பெறுகின்றதோ, அதற்கு அமைவாகவே ஏனைய நடவடிக்கைகளை விரைந்து முன்னெடுக்கமுடியும்.

எதிர்காலத்தில் இணை முகாமைத்துவக்குழுவை உள்ளூரை மையப்படுத்தியதாக உருவாக்குவது சிறப்பாக இருக்கும். அத்துடன் இந்தியத்தூதரகம் ஆலோசனை வழங்கும் ஒரு தரப்பாகவே எதிர்காலத்தில் இருக்கும்.

தற்போது இந்தியத்தூதரக அதிகாரிகளே பராமரித்துவரும் நிலையில் நிர்வாக நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்காக யாழ். மாநகரசபை அதிகாரிகளை நியமிக்க வேண்டும்.

இணை முகாமைத்துவக் குழுவின் கூட்டத்தை விரைவாக கூட்டுவதற்கு ஏதுவாக மத்திய அரசாங்கத்தின் கலாசார அமைச்சுக்கு உடனடியாகக் கடிதம் அனுப்பவேண்டும். கலாசார மண்டபம் யாழ். மாநகர சபையால் முழுமையாக இயக்கப்பட்ட பின்னர் அதில் எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுப்பது என்பது தொடர்பான திட்டமிடல்களை முன்னெடுக்கலாம் - என்றார். (ச-26,125, 66)

## புத்தாண்டு வழிபாடுகள்



சித்திரைப் புத்தாண்டையொட்டிக் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை வளாகத்தில் அமைந்துள்ள சிவன் ஆலயத்தில் கடந்த திங்கட்கிழமை சிறப்புப்பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து கலாசாலை அலுவலகத்தில் நாள் வேலை ஆரம்பிக்கப்பட்டதுடன் கைவிசேடமும் பரிமாறப்பட்டது. (ச-25.66)


## கேள்வி அறிவித்தல்
## வவுனியா வடக்கு பிரதேச சபை, நெடுங்கேணி

வவுனியா வடக்கு பிரதேச சபைக்கு சொந்தமான கடைகளை பத்து வருட காலப்பகுதிக்கு மாதவாடகை அடிப்படையில் வழங்குவதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்வி அறிவித்தல் அட்டவணை

| இல | கடை விபரம் | மாத வாடகை | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (ஒருங்கிணைந்த கட்டுப்பணம்) |
|---|---|---|---|---|---|
| 1 | கனகராயன்குளம் கடைத்தொகுதி கடை இல A | 6,500.00 | 3,000.00 | 10,000.00 | 780,000.00 |
| 2 | கனகராயன்குளம் கடைத்தொகுதி கடை இல B | 6,500.00 | 3,000.00 | 10,000.00 | 780,000.00 |
| 3 | கனகராயன்குளம் கடைத்தொகுதி கடை இல C | 6,500.00 | 3,000.00 | 10,000.00 | 780,000.00 |
| 4 | கனகராயன்குளம் கடைத்தொகுதி கடை இல 02 | 4,500.00 | 3,000.00 | 10,000.00 | 540,000.00 |
| 5 | பஸ்நிலைய கடைத்தொகுதி கடை இல A1 | 1,750.00 | 3,000.00 | 10,000.00 | 210,000.00 |
| 6 | பஸ்நிலைய கடைத்தொகுதி கடை இல A3 | 1,750.00 | 3,000.00 | 10,000.00 | 210,000.00 |
| 7 | பஸ்நிலைய கடைத்தொகுதி கடை இல A6 | 1,750.00 | 3,000.00 | 10,000.00 | 210,000.00 |
| 8 | பஸ்நிலைய கடைத்தொகுதி கடை இல A7 | 1,750.00 | 3,000.00 | 10,000.00 | 210,000.00 |
| 9 | பஸ்நிலைய கடைத்தொகுதி கடை இல B0 | 1,500.00 | 3,000.00 | 10,000.00 | 180,000.00 |
| 10 | பஸ்நிலைய கடைத்தொகுதி கடை இல B1 | 1,500.00 | 3,000.00 | 10,000.00 | 180,000.00 |
| 11 | பஸ்நிலைய கடைத்தொகுதி கடை இல B2 | 3,500.00 | 3,000.00 | 10,000.00 | 420,000.00 |
| 12 | பஸ்நிலைய கடைத்தொகுதி கடை இல B3 | 3,500.00 | 3,000.00 | 10,000.00 | 420,000.00 |
| 13 | பஸ்நிலைய கடைத்தொகுதி கடை இல B4 | 3,500.00 | 3,000.00 | 10,000.00 | 420,000.00 |
| 14 | பஸ்நிலைய கடைத்தொகுதி கடை இல B6 | 3,500.00 | 3,000.00 | 10,000.00 | 420,000.00 |
| 15 | பஸ்நிலைய கடைத்தொகுதி கடை இல C9 | 1,750.00 | 3,000.00 | 10,000.00 | 210,000.00 |

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் 2025.04.21 – 2025.05.09 பிற்பகல் 1.30 வரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளுதல் 2025.05.09 பிற்பகல் 02.00 மணி வரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் நேரம் 2025.05.09 பிற்பகல் 02.05 மணி

கேள்வி நிபந்தனைகள்

1. கேள்விதாரர் இலங்கைப்பிரஜையாக இருக்கவேண்டும் என்பதுடன் 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
2. கேள்விப் பத்திரம் பெறவிரும்புவோர் கோரிக்கைக் கடிதம், தேசிய அடையாள அட்டை மற்றும் அதன் நிழற்படப் பிரதி, கிராம சேவையாளரால் உறுதிப்படுத்தப்பட்ட வதிவிட சான்றிதழ் அல்லது வதிவிடத்தினை உறுதிப்படுத்தக்கூடிய ஏதேனும் ஒரு ஆவணம் என்பனவற்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
3. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிதி மற்றும் இரண்டாம் பிரதி என்பனவற்றை தனித்தனி உறைகளில் இட்டு "செயலாளர், வவுனியா வடக்கு பிரதேசசபை, நெடுங்கேணி" என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் 2025.05.09 ஆம் திகதிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும் அல்லது பிரதேச சபை தலைமைக்காரியாலயத்தில் கேள்விப்பெட்டியினுள் இடமுடியும்.
4. உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுனராகக்" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் தவறுனராக அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
5. சித்திபெறும் கேள்விதாரர் தங்களது கேள்வித்தொகையினை எம்மால் குறிப்பிடப்படும் திகதிக்கு முன்னர் ஒரே தடவையில் செலுத்தி ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.
6. சித்திபெற்ற கேள்விதாரரால் பிரதேசசபைக்கு செலுத்தப்பட்ட ஒருங்கிணைந்த கட்டுப்பணம் எச்சந்தர்ப்பத்திலும் மீளளிப்புச் செய்யப்படமாட்டாது.
7. குறித்த கடைகள் ஒப்பந்த திகதியில் இருந்து பத்து வருட காலப்பகுதிக்கு மாத்திரமே வழங்கப்படும் என்பதுடன் பத்து வருட முடிவில் கடை மீளப்பெறப்பட்டு மீள கேள்வி கோரப்படும்.
8. இவ் வியாபாரநிலையங்களுக்கான மாதாந்த வாடகை மேலே அட்டவணையில் உள்ளவாறு செலுத்துதல் வேண்டும். எனினும் காலத்திற்குகாலம் விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தால் நிர்ணயிக்கப்பட்டவாறு வாடகைத் தொகை மாற்றி அமைக்கப்படும்.
9. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை ஏற்கவோ, நிராகரிக்கவோ கேள்வி சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
10. ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி விண்ணப்பம் கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்பு பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
11. கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது எழுத்து மூல சம்மதம் பெற்ற பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
12. கடைகளை பெற்றுக்கொள்வோர் பொது சுகாதார நடைமுறைகளினை பின்பற்றுவதுடன் கடை மற்றும் அதன் சுற்றாடலில் உள்ள கழிவுகளை சேகரித்து அப்புறப்படுத்துவதற்கு முழுப் பொறுப்பாளியாவீர்கள்.
13. குறித்த கடைகளில் வாகன திருத்தகம், இரும்பு ஓட்டு தொழிலகம், வெடி மருந்து உற்பத்திகள் விற்பனை, நாவிதன் கடை, சலவைத்தொழில் போன்ற கடைகள் நடாத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது.

கேள்வி : சம்பந்தமான மேலதிக விபரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் நேரில் அல்லது 024-2030200, மற்றும் 0242053014 எனும் தொலைபேசி மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம்

சோ.மணிவண்ணன்,
செயலாளர்,
வவுனியா வடக்கு பிரதேச சபை.




மீசாலை வடக்கு நகுலன் சனசமூக நிலையத்தின் கலை கலாசாரப் பண்பாட்டு விழா தட்டாங்குள பிள்ளையார் கோவில் வீதியில் அமைந்துள்ள நகுலன் சனசமூக நிலையத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. (ச-25,159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலணை பிரதேச சபை - வேலணை
## வேலணை வங்களாவடிச் சந்தியில்
## புதிதாக அமைக்கப்பட்ட கடைகள் வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2025

வேலணை பிரதேச சபைக்கு சொந்தமான கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் விபரிக்கப்படும் கடைகளினை பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைய மாதாந்த வாடகைக்கு வழங்குவதற்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி :- 17.04.2025 தொடக்கம் 02.05.2025 நண்பகல் 12.00 மணிவரை
கேள்விப்பத்திரம் ஏற்கப்படும் இறுதித்திகதி :-02.05.2025 (வெள்ளிக்கிழமை) பிற்பகல் 01.00 மணிவரை
கேள்விப் பத்திரம் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி :- 02.05.2025 (வெள்ளிக்கிழமை) பிற்பகல் 02.00 மணி
கேள்விப் பத்திரம் திறந்து பரிசீலிக்கப்படும் இடம் :- சபா மண்டபம் , தலைமை அலுவலகம்.

| விபரம் | ஆகக் குறைந்த அடிப்படைக் கேள்வித் தொகை (ஒருங்கிணைந்த கட்டுப்பணம்) | மாதாந்த வாடகை | கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்பு |
|---|---|---|---|---|
| வங்களாவடிச் சந்தி,வேலணை | | | | |
| கடை இல 8 | 1,800,000.00 | 7,500.00 | 2,000.00 | 180,000.00 |
| கடை இல 9 | 1,800,000.00 | 7,500.00 | 2,000.00 | 180,000.00 |
| கடை இல 10 | 1,800,000.00 | 7,500.00 | 2,000.00 | 180,000.00 |
| கடை இல 11 | 1,800,000.00 | 7,500.00 | 2,000.00 | 180,000.00 |
| கடை இல 12 | 1,800,000.00 | 7,500.00 | 2,000.00 | 180,000.00 |
| கடை இல 13 | 1,800,000.00 | 7,500.00 | 2,000.00 | 180,000.00 |

1. கேள்விகள் இரு பிரதிகளில் தயாரித்து அரக்கு முத்திரையிட்டு மூலப்பிரதியினை செயலாளர். வேலணை பிரதேச சபை. வங்களாவடிச் சந்தி. வேலணை எனும் முகவரிக்கு 02.05.2025 ஆம் திகதி பிற்பகல் 01.00 மணிக்கு முன்னதாக கிடைக்க கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப் பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் குறித்த காலப் பகுதிக்குள் இடப்படல் வேண்டும். மறு பிரதியினை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி. யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு குறித்த திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்படல் வேண்டும்.
2. கேள்விப் பத்திரங்கள் கேள்வி கோரும் ஒவ்வொரு வியாபார நிலையங்களுக்கும் தனித்தனியாக மேலே குறிப்பிடப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்ட மீளளிக்கப்படாத படிவக் கட்டணமும், மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணமும் செலுத்தி மேற்குறித்த காலத்திற்குள் பெற்றுக்கொள்ள வேண்டும்.
3. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது. எனினும் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் ஏதும் மீளளிக்கப்படமாட்டாது.
4. ஆகக் குறைந்த அடிப்படை கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப் படுவதுடன் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது.
5. ஒன்றுக்கு மேற்பட்ட கடைகளுக்கு விண்ணப்பித்த ஒருவருக்கு அவற்றில் சித்தி பெற்ற ஒரு கடை மட்டுமே வழங்கப்படும் அவ்வாறு வழங்கப்படும் ஒரு கடையும் அவரால் கோரப்பட்ட ஆகக் கூடுதலான கேள்வித் தொகை கொண்ட கடை மட்டுமே வழங்கப்படும். இவ் நிபந்தனையை மீறும் பட்சத்தில் அவரது அனைத்து விண்ணப் பங்களும் நிராகரிக்கப்பட்டு கேள்வி பெறுவதற்கு தகுதி அற்ற நபராக கணிக்கப்பட்டு இது தொடர்பான வைப்புத் தொகை எதுவும் மீளளிக்கப்படமாட்டாது.
6. கேள்விகள் திறக்கப்படும் சமயத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது அனுமதியளிக்கப்பட்ட பிரதிநிதியோ சமூகமளிக்க முடியும்.
7. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்விதாரரை காரணம் காட்டாது ஏற்கவோ/ நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரம் உண்டு.
8. இவ் வியாபார நிலையங்களுக்கான மாதாந்த வாடகை விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தால் நிர்ணயிக்கப்படும் தொகைக்கேற்ப சித்திபெறும் கேள்விதாரரிடமிருந்து பிரதேச சபையால் அறவிடப்படும். அத்துடன் காலத்திற்கு காலம் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தால் நிர்ணயிக்கப்படும் வாடகை செலுத்தப்பட வேண்டும்.
9. கடையை வாடகைக்கு எடுப்பவராலேயே கடை நடாத்தப்படவேண்டும். பிரதிநிதி எவரும் அவர் சார்பில் நடாத்த அனுமதிக்கப்படமாட்டார். எனினும் வாடகைக்கு பெற்றவரின் இயலாமை, இறப்பு போன்ற காரணங்களினால் அவரது வாழ்க்கைதுணை அல்லது அவரது வாரிசு உரிய அனுமதியினைப் பெற்று நடாத்த அனுமதிக்கப்படுவர்.
10. கடை கட்டடத்தில் புனரமைப்பு வேலைகள், மாற்றங்கள், சேர்ப்புகள் எதுவும் சபையின் எழுத்து மூல அனுமதியின்றி மேற்கொள்ள முடியாது.
11. சித்திபெற்ற கேள்விதாரரின் கேள்வி வைப்புப்பணம் ஒப்பந்தம் பூர்த்தியான பின்னர் மீளளிக்கமுடியும். என்பதோடு சித்திபெறாத கேள்விதாரரின் கேள்வி வைப்பு பணமானது கேள்விச் சபைத் தீர்மானத்தின் பின்னர் மீளளிக்கப்படும்.
12. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் சபையால் வழங்கப்பட்ட கால எல்லைக்குள் ஒரே தடவையில் செலுத்த வேண்டிய திறப்புப் பணத்தினை (Key Money) முழுமையாகச் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இரு வாரத்திற்குள் பிரதேச சபையிடம் உரிய வியாபாரத்திற்கான வியாபார உரிமத்தினை பெற்று வியாபாரம் / தொழில் ஆரம்பிக்கப்படல் வேண்டும்.
13. சித்திபெற்ற கேள்விதாரரால் பிரதேச சபைக்கு செலுத்தப்பட்ட திறப்புப் பணத் தொகை (Key Money) எச் சந்தர்ப் பத்திலும் மீளளிப்புச் செய்யப்படமாட்டாது.
14. பெற்றுக் கொள்ளும் கடையில் ஏற்படும் இயற்கை அனர்த்தம் தவிர்ந்த பாதிப்புகளுக்கு வாடகைக்கு எடுத்தவரே பொறுப்புடையவராவார்.
15. கடைகளுக்கான மாதாந்த மின்சாரக் கட்டணத்தினை நிலுவைகளின்றி, இலங்கை மின்சார சபைக்கு மாதாந்தம் தாங்களே செலுத்துதல் வேண்டும்.
16. திண்ம மற்றும் திரவ கழிவுகள் தொடர்பில் சபையின் நடைமுறைகளைப் பின்பற்றி உரிய முறையில் அவற்றினை அகற்றுதல் வேண்டும்.
17. சித்தி பெறும் கேள்விதாரர் பிரதேச சபையால் அங்கீகரிக்கப்படாத பொருள்களை விற்பனை செய்வதோ, மதுபான வகைகளோ, அருவருப்பான பொருட்களோ, போதை வஸ்துக்களோ அல்லது தடைசெய்யப்பட்ட வேறு எந்த பொருள்களையோ விற்பனை செய்வது அல்லது வைத்திருத்தல் தடை செய்யப்படுவதுடன், கடைக்கட்டடம் வேறு எந்த சட்ட விரோத நடவடிக்கைகளுக்கும் பாவித்தல் கூடாது.
18. வாடகைப்பணம் ஒவ்வொரு மாதமும் 10ம் திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டும். தவறின் வாடகைத் தொகையின் 10 வீதத்தினை தண்டப் பணமாக சேர்த்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் வாடகைப்பணம் மூன்று மாதங்கள் தொடர்ந்து செலுத்த தவறின் முன்னறிவித்தலின்றி வாடகை ஒப்பந்தம் தானாகவே இரத்துச் செய்யப்பட்டதாக கருதப்படும்.
19. கேள்வி சம்மந்தமாக மேலதிக விபரங்களை/ தகவல்களை பிரதேச சபையின் தலைமை அலுவலகம் மற்றும் வேலணை உப அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
20. மேற்குறிப்பிட்ட விடயங்களுக்கு மேலதிகமாக ஒப்பந்த ஆவணத்தில் குறிப்பிடப்படும் விடயங்களுக்கு உடன்படுதல் வேண்டும் என்பதுடன் விதந்துரைக்கப்படாத விடயங்கள் தொடர்பில் சபையின் தீர்மானத்திற்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

குறிப்பு :- வேலணை பிரதேச சபையின் எல்லைக்குள் வசிப்பவர்கள் மட்டுமே கேள்வி கோரலில் பங்குபற்ற முடியும். (விண்ணப்பப்படிவம் பெற்றுக் கொள்வதற்கு வருகை தரும் போது கிராம சேவை உத்தியோகத்தரின் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ் மற்றும் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் என்பவற்றுடன் வருகை தருதல் வேண்டும் )

செயலாளர்,
வேலணை பிரதேச சபை,
வேலணை.
17.04.2025

# சிவநகர் சிவன்சோலையில் சட்டவிரோத மணலகழ்வு!

## தடுத்து நிறுத்துமாறு மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, ஏப். 17

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவின் கீழுள்ள சிவநகர் சிவன்சோலைக் கிராமத்தில் சட்டவிரோத மணல் அகழ்வு கட்டுப்பாடற்று நடைபெற்றுவருகின்றது. இதனைத் தடுத்துநிறுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அப்பகுதி மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

சிவநகர், சிவன்சோலை ஆகிய இருகிராமங்களும் இணையும் மருதடி வாய்க்கால் பகுதியில் கடந்த ஒருவருடத்துக்கும் மேலாக தொடர்ச்சியாக சட்டவிரோத மணல் அகழ்வு நடைபெற்று வருகின்றது.

தற்போது வாய்க்காலிலிருந்து சட்டவிரோதமாக அகழப்படும் மணலைப் பயன்படுத்தி அவ்விடத்திலேயே கற்கள் அரியப்பட்டு விற்பனைக்காக ஏற்றிச்செல்லப்படுகின்றது.

இதனால் தாழ்நிலப் பகுதியாகவுள்ள குறித்த கிராமங்கள் எதிர்வரும் மழைகாலங்களில் பெரும் அனர்த்தங்களை சந்திக்கும் வாய்ப்புகள் ஏற்படும்.

இது தொடர்பில் பலதடைவைகள் பொலிஸாருக்கு தகவலளிக்கப்பட்டும் எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. எனவே இந்தச் சட்டவிரோத மணல் அகழ்வுக்கெதிராக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் மேலும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)

# சீனாவுக்கு மேலும் வரி

அமெரிக்க அதிபர் ட்ரம்ப், உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் சீனாவுக்கு எதிரான வரிவிதிப்பை 245 வீதமாக உயர்த்தியுள்ளார். சீனாவுக்கு எதிரான வரிகள் மேலும் அதிகரிக்கும் என்றும் அவர் கூறியுள்ளார். (ம)

## வேலையாட்கள் தேவை

யாழில் இயங்கி வரும் பிரபல உயர்தர சைவ உணவகம் ஒன்றிற்கு பின்வரும் பணியிடங்களுக்கு வேலையாட்கள் தேவைப்படுகின்றனர். உணவு, தங்குமிடம் இலவசம்.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

- **சமையற் கலை நிபுணர் (Indian Master)**
- **மரக்கறி வெட்டுபவர்**
- **உணவு பரிமாறுபவர்**

போன்றவர்கள் அவசரமாக தேவைப்படுகின்றனர்.

தொடர்புகளுக்கு: **077 829 5658**

## நீங்கா நினைவில் ஆண்டு ஒன்று




**அமரர் தனபாக்கியலட்சுமி துரைரட்ணம்**
**திதி: அபரபக்க பஞ்சமி 17.04.2025**
**(ஓய்வுபெற்ற ஆசிரியை கோண்டாவில் இந்துக்கல்லூரி)**

திருநெல்வேலி பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணி விழா வாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்




எமது வித்தியாலயத்தில் மணிவிழா காணும்
எங்கள் உப அதிபர்

**திரு பரமானந்தர் கதிர்காம சோதிலிங்கம் B.A.PGDE**

**எமது வித்தியாலயத்தில் உப அதிபராக சேவையாற்றி இன்று (17.04.2025) வியாழக்கிழமை சேவையிலிருந்து ஓய்வு பெற்று செல்லும் அவரின் அற்பணிப்பான சேவை பாராட்டுவதுடன் ஓய்வுக் காலம் மேலும் சிறப்புற மனமுவந்து வாழ்த்துகின்றோம்.**

**சேவை விபரம்**

| | | |
|---|---|---|
| யா/ வரணிஸ்தான அ.மி.த.க.பாடசாலை | 17.08.1988 - 26.01.1992 | (ஆசிரியர்) |
| யா/ கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை | 27.01.1992 - 30.12.1993 | |
| யா / வரணிஸ்தான அ.மி.த.க.பாடசாலை | 03.01.1994 - 11.01.1994 | (ஆசிரியர்) |
| யா/ கரம்பைக் குறிச்சி அ.த.க.பாடசாலை | 12.01.1994 - 07.03.2012 | (ஆசிரியர்) |
| யா/கரம்பைக்குறிச்சிஅ.த.க. பாடசாலை | 08.03.2012 - 10.01.2017 | (அதிபர்) |
| யா/ மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம் | 11.01.2017 - 16.04.2025 | (உப அதிபர்) |

வாழ்த்துவோர்

**பாடசாலை சமூகம்**
**யா / மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம்**

# வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 21 . 04 . 1941



மறைவு 20 . 03 . 2025

**கடந்த (20/03/2025) வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவர்**

## அமரர் இராமலிங்கம் இராஜகோபாலு

**(ஓய்வு பெற்ற நில அளவையாளர்)**

சிவபதப்பேறு குறித்த 31 ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (17.04.2025) வியாழக்கிழமை காலை 07.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியகிரியை நாளை மறுதினம் ( 19.04.2025) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


**மீனாட்சி அம்மன் வீதி,**
**சங்கத்தானை,**
**சாவகச்சேரி.**

**குடும்பத்தினர்**
**077 133 9969**
**077 662 1398**

(CS0041) K

# மரண அறிவித்தல்

தோற்றம் 13 . 10 . 1943



மறைவு 16 . 04 . 2025

## நடராசா தியாகராசா

நடராசா தியாகராசா அவர்கள் நேற்று (16.04.2025) புதன்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற நடராசா பொன்னம்மாவின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஆறுமுகம் சின்னப்பிள்ளையின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சோதிமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற முத்துலிங்கத்தின் அன்புச் சகோதரரும் மகேந்திர நாயகியின் மைத்துனரும் கிருஷ்ணகுமார், உதயகுமார், சந்திரிக்கா, சூரியகுமார், பிறேமானந்தகுமார் ஆகியோரின் சிறிய தந்தையும் விஜயமாலா, வசந்தாதேவி, றங்கநாதன், மதிவதனா, சர்மிகா ஆகியோரின் சிறிய மாமனாரும் கீர்த்தனா, கிருசாந்தன், பிரிந்தன், சியானுகா, தருன், வினுசன், டருனித், மகிபன் ஆகியோரின் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2025) வியாழக்கிழமை முற்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்
இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இல: 80/3**
**சேர்பொன் இராமநாதன் வீதி**
**யாழ்ப்பாணம்**

**தகவல்: குடும்பத்தினர்**
**077 670 9117, 077 330 2853, 077 220 8439**

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில்
அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.
ஒரு சதுர அடி - 75 ரூபா
நிலம் இழுத்துப் பதிக்க - 100 ரூபா
**077 334 1281**

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த லண்டனில் வசிக்கும் மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு:- **+44 780 989 2218**

## ஆப்கானிஸ்தானில் நிலநடுக்கம்

ஆப்கானிஸ்தானில் நேற்று சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. ரிக்டர் அளவுகோலில் 5.9 அலகுகளாக இந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளது என்று ஆப்கானிஸ்தானின் புவியியல் கண்காணிப்பகம் அறிக்கையிட்டுள்ளது. (ம)

# ஒரு விளக்கு போதும்

# එක පහනක් ප්‍රමාණවත්ය

பௌத்த இந்து ஒற்றுமை බෞද්ධ හින්දු එකමුතුව

K Ganeshanathan



ජාතික ජන බලවේගය
**தேசிய மக்கள் சக்தி**
National People's Power

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# போலி வாக்குறுதியால் அநுர வாக்கு வேட்டை

## மன்னார் பொதுஅமைப்புகள் சாட்டை

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, போலி வாக்குறுதிகளை வழங்கியே தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டு வருகின்றார் என்று மன்னார் மாவட்ட பொது அமைப்புகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

இது தொடர்பில் மன்னார் மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்ததாவது:-

மன்னார் தீவுப் பகுதியில் முன்னெடுக்கப்படும் காற்றாலை மற்றும் கனியமணல் அகழ்வுத்திட்டங்களைநிறுத்துமாறுகோரி பல வருடங்களாகப் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. தாம் ஆட்சிக்கு வந்தவுடன் உடனடியாக இந்தச் செயற்பாடுகளுக்கு தீர்வு வழங்கப்படும் என தேர்தலுக்கு முன்பாக இந்த அரசாங்கம் எம்மைச் சந்தித்து வாக்குறுதி அளித்திருந்தது. ஆனால் இதுவரை எமக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. இது வெட்கக்கேடான அரசியல் செயற்பாடாகும்.

மக்களினுடைய நலனை கருத்திற் கொள்ளாமல், சர்வதேச நிறுவனங்களின்விருப்பத்துக்கு ஏற்பவே தற்போதைய அரசாங்கமும் செயற்படுகின்றமை உண்மையில் எமது மக்களை வேதனையில்தள்ளியுள்ளது. கடந்த காலத்தில் உள்ள ஆட்சியாளர்கள் மீது, 'அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அடிமைகள்' என்றும், 'இந்தியாவின் கைக்கூலிகள்' என்றும் பல்வேறு விதமான விமர்சனங்களை தற்போதைய ஜனாதிபதி முன்வைத்து வந்தார். அவ்வாறான விமர்சனங்களை முன்வைத்த ஜனாதிபதி அநுரவும் தற்போது அத்தகையதொரு பாதையிலேயே பயணிக்கின்றார்.

நடைமுறைச் சாத்தியமற்ற போலியான வாக்குறுதிகளை வழங்கி தேர்தலில் வெற்றிபெற்று, அதனை நடைமுறைப்படுத்த முடியாமல் திண்டாடுகின்றது அரசாங்கம். இவ்வாறிருக்கையில், இன்று மன்னாருக்கு மீண்டும் ஜனாதிபதி வருகின்றார். அரசியலில் அறம் மிகவும் முக்கியம். எனவே, மன்னார் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை அரசாங்கம் நிறைவேற்றவேண்டும்- என்றார். (ம-56)

## மரண அறிவித்தல்



**சாரதாதேவி இரங்கநாதன்**

வண்ணார்பண்ணை,உடையார் ஒழுங்கையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சாரதாதேவி இரங்கநாதன் அவர்கள் நேற்றுமுன்தினம் 15.04.2025 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முகாந்திரம் - துரையப்பா செல்வலெட்சுமி தம்பதியரின் இளையமகளும் , காலஞ்சென்றவர்களான நடராஜா - செல்வநாயகி தம்பதியரின் அன்பு மருமகளும் , காலஞ்சென்ற இரங்கநாதனின் அன்பகலாத மனைவியும் , கமலாதேவி , காலஞ் சென்றவர்களான சிவபாலன் , ஆனந்த மனோகரி , இராஜேஸ்வரி , சிவனேஸ்வரி மற்றும் யோகேஸ்வரி , ஆகியோரின் அன்புச் சகோதரியும் , அம்பலவாணர் , இரங்கநாயகி , ஆகியோரின் மைத்துனியும் , வினோதினி , பிரதீபன் , ஆகியோரின் அன்பகலாத சித்தியும், சஞ்சீவனின் அன்பகலாத மாமியும் ஆவார் .

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2025) வியாழக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று கோம்பையன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார் , உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிருந்தாவனம்
29/21 உடையார் ஒழுங்கை, ஐயனார் கோவிலடி,
வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 552 5831

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
வைத்தீஸ்வரன்
ரஞ்சிதமலர்
(உஷா பான்ஷி)

தோற்றம்
26.06.1952

மறைவு
28.04.2024

ஓராண்டு கழிந்தாலும்
ஓவியமாய் பதிந்திருக்கிறது
உங்கள் முகம்
காவியமாய் வாழ்ந்தீர்கள்
உம்மை
காலமெல்லாம் நினைத்திருப்போம்
ஆண்டவன் காலடியில்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

என்றும் நினைவில்
குடும்பத்தினர்
தியாகராஜா வைத்தீஸ்வரன்
(உஷா பான்ஷி-கட்டிபிராய்)

## மரண அறிவித்தல்

தோற்றம்
17 . 04 . 1985



மறைவு
15 . 04 . 2025

**திரு. அருளானந்தம் துஸ்யந்தன்**
(குட்டி பாம் உரிமையாளர் தட்டா தெருச்சந்தி)

அருளானந்தம் துஸ்யந்தன் அவர்கள் கடந்த 15.04.2025 செவ்வாய்க்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2025) வியாழக்கிழமை தந்தையின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 02.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

(இறுதிக்கிரியைகள் நேரடியாக You tube இல் குறிப்பிட்ட அந்த நேரத்தில் பார்வையிட முடியும் என்பதை அறியத்தருகின்றோம்)

(Ariviththal You tube Channel)

755, மானிப்பாய் வீதி,
ஓட்டு மடம்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
பெற்றோர்

## அறிவித்தல்

மதிப்பிற்குரிய
**Nalin Information Technologies (Pvt) Ltd**
**வாடிக்கையாளர் கவனத்திற்கு**

எமது நிறுவனத்தின் சகல கிளைகளிலும் (யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார்) மூன்று மாதகாலப் பகுதிக்குள் (01.01.2025 - 31.03.2025) தங்களால் திருத்த வேலைக்காக ஒப்படைக்கப்பட்ட கணினி மற்றும் கணினிசார் பொருட்களை (Warranty தவிர்ந்த) எதிர் வரும் 30.04.2025ஆம் திகதிக்கு முன்னராக பெற்றுக் கொள்ளவும். தவறும்பட்சத்தில் தங்களால் வழங்கப்பட்ட பொருட்கள் இலத்திரனியல் கழிவாக எடுத்துக் கொள்ளப்படும் என்பதனை மிகவும் மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம். அப்பொருட்களுக்கு ஏற்படும் சேதங்களிற்கு எந்த வகையிலும் நிறுவனம் பொறுப்பேற்காது என்பதை தாழ்மையுடன் அறியத் தருகின்றோம். இதற்கு முற்பட்ட காலப்பகுதியில் வாடிக்கையாளரால் மீளபெற்றுக் கொள்ளப்படாத பொருட்கள் ஏற்கனவே கழிவாக எடுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

குறிப்பு -
எமது நிறுவனத்தில் திருத்தவேலைக்காக பொருட்களை ஒப்படைக்கும் போது இரு வாரங்களில் பொருட்களை மீளப்பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பது எமது நிறுவனத்தின் நிபந்தனையாகும்.

NALIN Information Technologies(Pvt)Ltd
Computers of the North

Email – info@nit.lk
Contact No - 077 542 7426
194/2 Parameswara Junction,
Palaly Road, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் நிறுத்தத்துக்கு ஹமாஸ் மறுப்பு

காஸாவில் உள்ள அனைத்து ஆயுதக் குழுக்களும் முற்றுமுழுதாகச் சரணடைய வேண்டும் என்ற போர் நிறுத்தத் திட்டத்தை ஹமாஸ் நிராகரித்துள்ளது.

காஸாவில் தனது இராணுவ நடவடிக்கையை இஸ்ரேல் மீண்டும் ஆரம்பித்துள்ளது. இதற்கெதிராக உலக நாடுகள் பலவும் கண்டனம் தெரிவித்ததைத் தொடர்ந்து, 'காஸாவில் செயற்படுத் அனைத்து ஆயுதக் குழுக்களும் சரணடைந்தால், போர் நிறுத்தம் செய்யப்படும்' என்று இஸ்ரேல் முன்மொழிவை முன்வைத்தது. ஆனால், இதற்கு ஹமாஸ் அமைப்பு திட்டவட்டமாக மறுத்துள்ளது. (ம)

## உடற்பயிற்றுவிப்பாளர் தேவை

**டென்னிஸ் உதவிப் பயிற்றுவிப்பாளர் மற்றும் உடற்பயிற்றுவிப்பாளர் தேவை (ஆண், பெண்)**

அறிமுக நிலை மற்றும் நடுத்தர நிலை மாணவர்களுக்கு டென்னிஸ் பயிற்சியளிக்க உதவித்திறனுள்ள பயிற்றுவிப்பாளர்கள் தேவை.

ரெனிஸ் விளையாட தெரிந்திருத்தல் கட்டாயமானதல்ல ஆனால் ஏதேனும் ஒரு விளையாட்டில் அனுபவம் இருத்தல் வேண்டும்.

**ரெனிஸ் தொடபான வழிகாட்டல்கள் பயிற்சிகளிக்கப்படும்**

**வேலை இடம் :** யாழ்ப்பாணம்

**வேலை நேரம் :** பகுதி நேரம் / முழுநேரம்

**தகுதி :**
- O/L மற்றும் A/L தேரிச்சி கட்டாயமானது
- விளையாட்டு மற்றும் மாணவர்களுடன் பணியாற்றும் ஆர்வம்
- நல்ல தொடர்பு கொள்ளும் திறன் (தமிழிலும் ஆங்கிலத்திலும்)
- அனுபவம் உள்ளவர்கள் முன்னுரிமை பெறுவர்

**ஊதியம் :** அனுபவம் மற்றும் திறன் அடிப்படையில்

**விண்ணப்பிக்க :** தங்களின் சுயவிவரத்துடன் கீழ்க்கண்ட முகவரியில் எங்களை தொடர்புகொள்ளவும்

(CS 7992) V-1

Email: jobstennis1@gmail.com

**076 587 3972**

## மரண அறிவித்தல்

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமக

தோற்றம் 03 . 04 . 1958



மறைவு 16 . 04 . 2025

### திருமதி சரோஜா கிருஸ்ணகுமார்

சங்கானை நாகலிங்கசுவாமிகள் வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரோஜா கிருஸ்ணகுமார் நேற்று (16.04.2025) புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைரத்தினம் தங்கரத்தினம் தம்பதிகளின் மூத்த புதல்வியும் காலஞ்சென்றவர்களான நடேசன் பூபதி தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற கிருஸ்ணகுமார் அவர்களின் அன்பு மனைவியும், திருக்குமரன், சுபாஜினி, விஜிதா (கொழும்பு ஹம்சாகல்லூரி), நளினி (சிறுவர் நீதிவான் நீதிமன்றம் யாழ்ப்பாணம்), துஷாந்தி (இணுவில் மத்திய கல்லூரி), சர்மிலா, ரிஷாந்தினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவதர்ஜினி, சதீசன் (சுபா ஜிவல்லரி தண்ணீரூற்று), ரகுநாதன் (Soft Logic Instituit Manager Colombo), அஜந்தன், ஞானேந்திரன் (கிராமசேவையாளர்), ரமேஸ் ஆகியோரின் அன்பு மாமியும், பாலரதன், லலிதா, ரஜனி ஆகியோரின் சகோதரியும் பதுசன், கரீஸ்மன், டிலக்ஸ்மன், மதுஷியா, நிலக்ஷியா, நிக்ஷித் ஜஸ்வினி, பிரஜஸ்வின் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று (17.04.2025) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

நாகலிங்க சுவாமிகள் வீதி
சங்கானை

தகவல்:
குடும்பத்தினர்
077 202 2981, 074 127 7339

## மரண அறிவித்தல்

தோற்றம் 29 . 11 . 1954



மறைவு 16 . 04 . 2025

### நடராஜா சௌந்தரராஜன்

ஓய்வு பெற்ற களஞ்சிய காப்பாளர் Lanka Cement Ltd, காங்கேசன்துறை, கொழும்பு
(முன்னாள் காங்கேசன்துறை சாரண மாவட்ட ஆணையாளர், முன்னாள் இலங்கை சாரணிய சங்க தலைமையக ஆணையாளர், சாரணர் பயிற்சி சபையின் பயிற்றுனர் தலைவர்.)

தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் நிகரை வீதி, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா சௌந்தரராஜன் அவர்கள் நேற்று (16.04.2025) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜா-பரமேஸ்வரி தம்பதியின் மூத்த புதல்வனும் காலஞ்சென்ற பத்மநாதன்-கனகம்மா தம்பதியின் பாசமிகு மருமகனும் ரஞ்சிதராணி அவர்களின் அன்புக் கணவரும் சஜிதாவின் பாசமிகு தந்தையும் ரஜீவனின் (முகாமைத்துவ உதவியாளர், மாவட்ட/நீதிவான் நீதிமன்றம், சாவகச்சேரி) பாசமிகு மாமனாரும் கமலேஸ்வரி, சிவனேஸ்வரி காலஞ்சென்ற திலகவதி, ரஞ்சன், ஆனந்தசோதி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு சகோதரரும் தர்மதாஸ் (கனடா), பவளராணி (கனடா), வசந்தகுமார் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (17.04.2025) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கராச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

நிகரை வீதி,
(சங்கானை பிரதேச செயலகத்திற்கு அருகாமை)
சங்கானை.

தகவல்: குடும்பத்தினர்.
சஜிதா ரஜீவன் (மகள்)
077 217 7396

## மரண அறிவித்தல்

தோற்றம் 22 . 09 . 1934



மறைவு 15 . 04 . 2025

### திரு செல்லையா தங்கராசா

கோகுல வீதி கோண்டாவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு செல்லையா தங்கராசா அவர்கள் நேற்று முன்தினம் (15.04.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா-நாகம்மா தம்பதியின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-சின்னம்மா தம்பதியின் மருமகனும் காலஞ்சென்ற பரமேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் கருணாகரன் (கனடா), கணேசமூர்த்தி (காந்தி), காலஞ்சென்ற சரவணபவன், சாந்தினி, கருணாநிதி (சுவிஸ்), சுகந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும் அகிலாதேவி (கனடா), திலகராணி, கமலநாதன் (மாஸ்டர் கராஜ் கோண்டாவில்), ஜெசிந்தா (சுவிஸ்), பிரபாகரன் (பிரதேச சபை ஊழியர்-பூநகரி) ஆகியோரின் அன்பு மாமனாரும் அபிஷா (கனடா), சுருதிகா (கனடா), வாகிசன், விதுசன், அனோஜன், (உதவி சுங்க அத்தியட்சகர்), ஜசிந்தா (அபிவிருத்தி உத்தியோகத்தர், பொது நிர்வாக அமைச்சு), சர்மிளா (லண்டன்), தவக்குமார் (லண்டன்), தமிழவன் (சுவிஸ்), திஷானி, கோபிகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.04.2025) வெள்ளிக்கிழமை காலை 7.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் கோண்டாவில் கலைவாணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

077 601 5470
077 779 3055

(CS 2969) V-1

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## குருதிக்...

சடலமாக மீட்கப்பட்டவர் வவுனியா விநாயகபுரத்தைச் சேர்ந்த கோபிதாசன் (வயது-33) என்று பொலிஸார் தமது முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரிவித்துள்ளனர்.

குறித்த இளைஞர் கடந்த 14ஆம் திகதிமுதல் காணாமற்போயிருந்த நிலையில், அவரைப் பல்வேறு இடங்களிலும் தேடிவந்ததாக குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. (அ-ம-110-18)

## மாங்கொல்லை...

காங்கேசன்துறை மேற்கு, ஜே/233 கிராம அலுவலர் பிரிவிலுள்ள 23 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்ட 47 பேருக்குச் சொந்தமான குறித்த காணிகள் 2023ஆம் ஆண்டு நடுப்பகுதியில் விடுவிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டன. ஆனால், சிமெந்துத் தொழிற்சாலையில் பாதுகாப்புக் கடமையில் இருந்த இராணுவத்தினரின் தேவைகருதி அந்தக் காணிகளிலும் 13 ஏக்கர் நிலப்பகுதியே மக்களிடம் ஒப்படைக்கப்பட்டன. மிகுதி 10 ஏக்கர் நிலப்பரப்பும் சிமெந்துத் தொழிற்சாலையில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுவந்த இராணுவத்தால் பயன்படுத்தப்பட்டுவந்தது.

தற்போது சிமெந்துத் தொழிற்சாலை முதலீட்டுச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அங்கு புதிய முதலீடுகளை உள்வாங்கி, அடுத்தகட்டத்தை நோக்கிக் கொண்டுசெலும் முயற்சிகள் (நடைமுறைச் செயற்பாடுகள்) கடந்த ஏழு மாதங்களுக்கும் மேலாக முன்னெடுக்கப்படுகின்றன. எனினும், இராணுவத்தால் பயன்படுத்தப்பட்டுவந்த 10 ஏக்கர் காணிகள் தொடர்ந்தும் இராணுவத்தின் பிடியிலேயே உள்ளன.

அந்தக் காணிகளில் உள்ள இரண்டு வீடுகளில் தற்போதும் இராணுவத்தினர் (சிமெந்துத் தொழிற்சாலையின் பாதுகாப்புக்காக இருந்தவர்கள்) தேவையற்ற விதமாகத் தங்கியுள்ளனர். இதனால், கண்களுக்கு எட்டக்கூடிய இடத்தில் தமது வீடுகள் இருந்தும், அவை விடுவிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டும் அவற்றுக்குச் செல்லமுடியாத நிலையே காணப்படுகின்றது என்று பாதிக்கப்பட்ட மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்துடன், விடுவிக்கப்பட்ட 23 ஏக்கர் காணிகளில், பொதுமக்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்ட 13 ஏக்கர் பகுதிக்கும் உரிய பாதைகளும், இராணுவத்தால் தற்போது அடாத்தாகப் பிடித்துவைத்துள்ள பகுதியிலேயே அமைந்துள்ளன. இதனால், மேற்படி 13 ஏக்கர் பகுதியில் ஆதனங்களைக் கொண்ட மக்களும் தமது காணிகளுக்குள் செல்லமுடியாத நிலை காணப்படுகின்றது.

எனவே, இவ்வாறான போலி விடுவிப்புகளை மேற்கொள்ளாமல், தமது காணிகளை முற்றுமுழுதாகப் பயன்படுத்தும் வகையில் அவற்றை தம்மிடம் உடனடியாக ஒப்படைக்கவேண்டும் என்று பாதிக்கப்பட்ட பொதுமக்கள் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

இதேவேளை, ரணிலால் உறுமய திட்டத்தின் கீழ் விடுவிக்கப்பட்ட காணிகளும், இராணுவத்தின் பிடியில் தொடர்ச் சியாக உள்ளன என்ற விடயத்தை உத யன் நேற்று வெளிப்படுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## பிள்ளையான்...

தரணியுமான கம்மன்பில தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிள்ளையானுக்காக சட்டத்தரணியாக முன்னிலையாவதை முன்னிட்டு நான் பெருமைப்படுகின்றேன். ஏனெனில், புலிகள் அமைப்பிடமிருந்து இந்த நாட்டைப் பாதுகாப்பதற்காக வழங்கிய தீர்க்கமான பங்களிப்புக்காக தேசிய நாயகனாகக் கருதப்படவேண்டியவரே பிள்ளையான். ஒரு தேசப்பற்றாளருக்காகவே நான் சட்டத்தரணியாக முன்னிலையாகியுள்ளேன்.

பிள்ளையானுடன் 30 நிமிடங்கள் கலந்துரையாடினேன். 4 பொலிஸார் எமது உரையை முழுமையாக செவிமடுத்துக்கொண்டிருந்தனர். சட்டத்தரணியொருவர் தனது சேவையாளருடன் கலந்துரையாடும் விடயம் இரகசியத்துக்கு உட்பட்டது. எனினும், அங்கு நான்கு பொலிஸார் இருந்தனர்.

பிள்ளையான் கதறி அழுதவாறே என்னிடம், 'புலிகள் அமைப்பில் இருந்து விலகி, இராணுவத்துடன் இணைந்து உயிரைக்கூட பணயம் வைத்து புலிகளைத் தோற்கடிப்பதற்கு போராடினேன். அன்று புலிகள் பக்கம் இருந்தவர்களில் சிலர் இன்று நாடாளுமன்ற உறுப்பினர்களாக உள்ளனர். சிலர் வியாபாரிகளாகியுள்ளனர். மேலும் சிலர் அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர்களாகியுள்ளனர். இவர்களிடம் கேள்வி கேட்கப்படுவதில்லை. என்னை 5 வருடங்கள் தடுத்துவைத்திருந்தனர். இறுதியில் வழக்குத் தொடுப்பதற்கு போதுமான சாட்சி இல்லை என்பதால் வழக்கு மீளப்பெறப்பட்டது. தற்போது மீண்டும் தடுப்பில் வைத்துள்ளனர். புலிகள் அமைப்பை தோற்கடிப்பதற்காக, நாட்டுக்காக உயிரை பணயம் வைத்து போராடியதாலா என்னை இப்படி நடத்துகின்றனர்?' என கேள்வி எழுப்பினார்.

சமூகவலைத்தளங்களில் எழுதும் சிறு பிள்ளைகளுக்கு பிள்ளையான் என்பவர் யாரென்பது தெரியாமல் இருக்கலாம். புலிகளிடமிருந்து இந்த நாட்டைப் பாதுகாப்பதற்காக அவர் வழங்கிய தீர்க்கமான பங்களிப்புக்காக தேசிய நாயகனாக கருதவேண்டிய நபர் அவர்.

கருணாவும், பிள்ளையானும் புலிகள் அமைப்பில் இருந்து விலகி, புலிகளுக்கு எதிராக போராட தீர்மானித்தமையே புலிகள் அமைப்பின் முடிவின் ஆரம்பமாகும். பிள்ளையான் என்பவர் புலிகள் அமைப்பில் பலவந்தமாக இணைக்கப்பட்ட சிறுவர் போராளியாவார். புலிகள் அமைப்பில் சிறுவர் போராளிகள் இருந்தனர் என்பதற்கான ஒரு சாட்சியே பிள்ளையான்.

கருணா அம்மானும் புலிகள் அமைப்பில் சிறந்து விளங்கியவர். வடக்குச் சமரின்போது புலிகளை, கிழக்குப் புலிகளே பாது[illegible] ஆயிரம் பய[illegible]

கருணாவும், பிள்ளையானும் புலிகள் அமைப்பில் இருந்து வெளியேறினர். நாட்டைவிட்டு தப்பிச்செல்லாது, புலிகள் அமைப்பை ஒழித்துக்கட்டுவதற்கு இராணுவத்துடன் இணைந்து போராடும் முடிவை இவர்கள் இருவரும் எடுத்தனர். புலிகளிடமிருந்து எம்மால் இலகுவில் கிழக்கையும் மீட்கக்கூடியதாக இருந்தது. பிள்ளையான் என்பவர், புலிகள் அமைப்பை கைவிட்டவர் என்பது மட்டுமல்ல புலிகளுக்கு எதிராகவும், எமது நாட்டுக்காகவும் போராடிய தேசப்பற்றாளர் - என்றார். (அ-ம-44)

## அமெரிக்காவின்...

புதிய பரஸ்பர வரிக்கொள்கை அமுலாவதை அமெரிக்க அதிபர் ட்ரம்ப் 3 மாதங்களுக்கு ஒத்திவைத்துள்ளார். எனினும், 3 மாதங்களுக்கு பிறகு மேற்படி வரி அமுலுக்கு வரும். இது தேர்தல்கால உறுதிமொழியென்பதால் திட்டத்தை ட்ரம்ப் மீளப் பெறமாட்டார்.

இலங்கைமீது விதிக்கப்பட்டுள்ள பரஸ்பர வரி குறைக்கப்பட்டாலும்கூட, 25 அல்லது 30 சதவீத வரியை செலுத்தவேண்டி ஏற்பட்டால் அது எமக்குப் பெரும் பிரச்சினையாக அமையும். எனவே, இந்தப் பிரச்சினைக்கு நாம் முகங்கொடுக்கவேண்டும். இந்த மூன்றுமாத காலப் பகுதிக்குள் உலக நாடுகளுடன் பேச்சுகளை ஆரம்பிக்கவேண்டும்.

வரி விதிப்பால் ஆடை உற்பத்தித் துறையில் தொழில் இழப்புகள் ஏற்படலாம். அதனுடன்தொடர்புபட்ட ஏனைய உப தொழில்களின் வருமானத்துக்கும் தாக்கம் வரும். அதுமட்டுமல்ல எமது நாட்டு பொருளாதாரத்துக்கும் தாக்கம் வரும்.

2028ஆம் ஆண்டில் நாம் கடனை மீளச் செலுத்தவேண்டும். அதனை இலக்காகக்கொண்டுசெயற்படவேண்டும். தற்போது எம்முன் பல பிரச்சினைகள் உள்ளன. எனவே, அமெரிக்காவுடன் பேச்சு நடத்தவேண்டும். இந்த விடயங்களை ஓர் அவசர நிலையாக அரசாங்கம் கருதவேண்டும். இதற்கெதிராக முன்னெடுக்கப்படவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தவேண்டும் - என்றார். (அ-ம-44)

## மேன்முறையீட்டு...

யாழ்ப்பாணம் மாநகரசபை, வல்வெட்டித்துறை நகரசபை, சாவகச்சேரி நகரசபை, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, பருத்தித்துறை பிரதேசசபை, சாவகச்சேரி பிரதேசசபை, நல்லூர் பிரதேசசபை ஆகிய உள்ளூராட்சி சபைகளில் வேட்புமனு நிராகரிக்கப்பட்ட தரப்புகளே மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளன. (அ-ம-26)

## உள்ளூராட்சி...

யுள்ளன. இது தொடர்பில் தென்னிலங்கையில் உள்ள பிரதான கட்சிகள் ஆரம்பக்கட்ட பேச்சுகளை ஆரம்பித்துள்ளன எனவும், கூட்டணி அமைப்[illegible] அடிப்படையில் [illegible] தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும் அறியமுடிகின்றது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தனித்து ஆட்சி அமைப்பதற்குரிய பெரும்பான்மைபலம் தேசிய மக்கள் சக்திக்குக் கிடைக்காது என எதிரணிகள் நம்புகின்றன. எனவேதான் உள்ளூராட்சி சபைகளின் அதிகாரத்தை கைப்பற்றுவதற்கு முயற்சித்து வருகின்றன. (அ-ம-44)

## யாழ்ப்பாணம்...

உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டுத் தேசிய மக்கள் சக்தியின் பரப்புரைக் கூட்டம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நல்லூரில் அமைந்துள்ள சங்கிலியன் தோப்பு வளாகத்தில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் கலந்துகொள்வதற்காகவே ஜனாதிபதி அநுர யாழ்ப்பாணத்துக்கு வருகைதரவுள்ளார். (அ-ம-26-125-66)

## சட்டத்தரணியாக...

பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கண்டியில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர், ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

ஊழல், மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக இலஞ்ச, ஊழல் விசாரணைக்குழு நடவடிக்கை எடுத்துவருகின்றது. கடந்த காலங்களில் இருட்டடிப்புச் செய்யப்பட்ட கோப்புகள் தொடர்பான விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

அதேபோல குற்றப்புலனாய்வுத் திணைக்களமும் விசாரணைகளை துரிதப்படுத்திவருகின்றது. சட்டமா அதிபர் திணைக்களம் ஊடாக குற்றப்பத்திரிகைகள் தாக்கல்செய்யப்பட்டு வருகின்றன. இவ்வாறு சட்டத்தின் பக்கம் செய்யவேண்டிய பணிகள் துறைசார் நிறுவனங்களால் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. குறித்த நிறுவனங்களுக்குரிய வளங்களை மட்டுமே அரசாங்கம் வழங்கிவருகின்றது.

அதேவேளை, பிள்ளையானின் சட்டத்தரணியாக தற்போது கம்மன்பில செயற்படுகின்றார். கம்மன்பில வழக்குகளில் வாதாடுவதை எமது நாட்டு மக்கள் கண்டிருக்கமாட்டார்கள். எனினும், தனது சட்டத்தரணியாக கம்மன்பிலவை பிள்ளையானும் ஏற்றுள்ளார். இது சூழ்ச்சியாகும். கடந்தகால சம்பவங்களின் முடிச்சுகளைதான் நாம் தற்போது அவிழ்த்துவருகின்றோம் - என்றார். (அ-ம-44)

## கஞ்சா...

கிடைத்த இரகசியத்தகவலுக்கு அமைய, விசேட அதிரடிப் படையினரும், பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையின் போதே, மேற்படி கஞ்சாப் பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர் புளியம்பொக்கணைப் பகுதியில் வீடொன்றை வாடகைக்குப் பெற்று அங்கிருந்து கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டு வந்துள்ளார் என்று முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரு...

மானிப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆலய மொன்றில் சண்டிலிப்பாய் பகுதியைச் சேர்ந்த இரண்டு இளைஞர்களுக்கும், உடுவில் பகுதியைச் சேர்ந்த குழுவொன்றுக்கும் இடையே நேற்றுமுன்தினம் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து, குறித்த இரண்டு இளைஞர்களும் சண்டிலிப்பாய் பகுதியிலுள்ள தமது வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்தபோது, ஓட்டோவிலும், இரண்டு மோட்டார்சைக்கிள்களிலும் பின்தொடர்ந்து சென்ற குழுவினர் அந்த இரண்டு இளைஞர்களையும் ஓட்டோவுக்குள் ஏற்றி வலுக்கட்டாயமாகக் கடத்திச்சென்று தாக்குதல் நடத்தியுள்ளனர். இதன்போது அந்தப் பகுதியால் வந்த பொலிஸாரைக் கண்டதும் அந்த இளைஞர்குழு தப்பியோடியுள்ளது.

தாக்குதலில் காயமடைந்த இரண்டு இளைஞர்களும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அத்துடன், கடத்தலுக்குப் பயன்பட்ட ஓட்டோவும், மோட்டார்சைக்கிள்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட நிலையில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-125)

**வேலையாட்கள் தேவை**

பிரபல உணவகம் ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

சமையலாளர் - 100 000/-

உணவு பரிமாறுபவர் - 30000/-

ரொட்டி போடுபவர்

தொடர்பு:- 077 407 8235



# விளையாட்டுகள் மீதான நாட்டம் மாணவர்களிடையே அருகுகிறது

### வடக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஏப்.17**

**துரதிர்ஷ்டவசமாக எமது பிரதேசங்களில் விளையாட்டுகளில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை அருகிவருகின்றது. பல ஊர்களில் இருந்த விளையாட்டுக்கழகங்கள் இன்று செயற்றிறன் இழந்திருக்கின்றன என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் சுட்டிக்காட்டியுள்ளார். வட்டுக்கோட்டை விளையாட்டுக்கழகமும் பொதுமக்களும் இணைந்து நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடத்திய புதுவருட விழாவில் பங்கேற்று உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்றைய பிள்ளைகள் பாடசாலை முடிந்தவுடன் தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் செல்கின்றனர். இல்லையேல் அலைபேசியுடன் வீட்டில் மூழ்கிக்கிடக்கின்றனர்.

விளையாட்டுமைதானத்தை எட்டிப்பார்ப்பது அருகிவருகின்றது.

எங்களின் திறமைகளை வளர்த்துக்கொள்வதற்கும், தலைமைத்துவத்தை மேம்படுத்திக்கொள்வதற்கும் விளையாட்டுகள் பெரிதும் உதவுகின்றன. சிறந்த விளையாட்டு வீரர்களிடம் மற்றையவர்களை மதிக்கும் பண்புகளைக் காணலாம்.

இன்றைய இளைய சமூகத்தின் மத்தியில் சமூகப் பிறழ்வு அதிகரித்துச் செல்கின்றமைக்கு, விளையாட்டுகளில் பங்கேற்காமை பிரதான காரணமாகும். உண்மையில் விளையாட்டுகளிலும், கலைச் செயற்பாடுகளிலும் இளையோர் நாட்டம் செலுத்தினால் சமூகப்பிறழ்வுகள் அதிகளவில் குறைவடையும்.

அதற்கமைய கிராமங்களில் விளையாட்டுக்கழகங்களை உருவாக்கி இளையோரை ஈர்த்தால் எதிர்காலத்தில் சிறந்த நிலையை அடையமுடியும் - என்றார். (ச-33-55)

31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவில்லலும்

தோற்றம் 21 . 06 . 1942

மறைவு 19 . 03 . 2025



கடந்த 19.03.2025 புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி

**அமரர் தேவராசா நாகேஸ்வரி**

(காலி ஆனந்தம் அவர்களின் பாரியார் )

அன்னாரின் வீட்டுக்கிருத்தியை நாளை (18.04. 2025) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற உள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மரணச் செய்தி கேட்டு நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்தும் தொலைபேசியூடாகவும் முகநூல் மின்னஞ்சல் மூலமாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மலர் வளையங்கள் மலர் மாலைகள் சாத்தியவர்களுக்கும் உற்றார் உறவினர் நண்பர்கள் மற்றும் இன்று வரை எமக்கு சகல உதவிகளையும் செய்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்

47, பெரிய தம்பிரான் வீதி,
வண்ணார்பண்ணை

(CS/57988) J-1

குடும்பத்தினர்

### வாக்குவாதம் வினையானது

# கைதியொருவருக்கு சுடுதண்ணீர் வீச்சு!

### யாழ். சிறைச்சாலையில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஏப். 17

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில், இரண்டு கைதிகளுக்கு இடையில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக, கைதியொருவர் இன்னொரு கைதிமீது சுடுதண்ணீரால் ஊற்றியதைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட கைதி அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். தாக்குதலை மேற்கொண்ட கைதிக்கு எதிராக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவருக்கு எதிரான நீதிமன்ற நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-125)

# நாசா விஞ்ஞானி பணிநீக்கம்

ட்ரம்பின் உத்தரவைத் தொடர்ந்து, நாசாவில் பணியாற்றிய இந்தியப் பெண்ணான நீலா ராஜேந்திரா பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார். (ம)

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111

விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் ... இல் உள்ள அவர்களது பணிமனையில் 17.04.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org